விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii




E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 213 வள்ளுவர் ஆண்டு 2055 ஆடி 03 வெள்ளிக்கிழமை (19.07.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

### 22ஆவது திருத்தத்தை வர்த்தமானியில் வெளியிடாதீர்

## அதிகாரத்தைத் தக்கவைக்கும் ரணிலின் முயற்சிக்கு முட்டுக்கட்டை போட்டார் விஜயதாஸ ராஜபக்ஷ

(கொழும்பு)

அமைச்சரவையில் அங்கீகரிக்கப்பட்டுள்ள அரசியலமைப்பின் 22ஆவது திருத்தத்தை ஜனாதிபதித் தேர்தல் முடியும்வரை வர்த்தமானியில் வெளியிடுவதை தவிர்க்குமாறு நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ நீதி அமைச்சின் செயலாளருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது தொடர்பில் நிலவும் நிச்சயமற்ற தன்மையை போக்கும் நோக்கில் இவ்வாறு உத்தரவு பிறப்பித்துள்ளதாக அமைச்சர் கூறியுள்ளார்.

22 ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டமூலம் திருத்தங்களுடன் கடந்த 2022ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 21ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

என்றாலும், அது 21ஆம் திருத்தச்சட்டமாகவே அரசியலமைப்புக்குள் உள்வாங்கப்பட்டிருந்தது.

21ஆவது திருத்தம் தொடர்பில் அத்தருணத்தில் நிலவிய சிக்கல்கள் காரணமாக 22 ஆவது திருத்தமாக நிறைவேற்றப்பட்டு 15

### நாடு முழுவதும் சுற்றிவளைப்பு

## 713 பேர் கைது

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் கடந்த 24 மணித்தியாலங்களுக்குள் மேற்கொள்ளப்பட்ட யுக்திய நடவடிக்கையின் போது போதைப்பொருள் குற்றம் தொடர்பில் 713 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். 14

# அதிகாரங்களை பயன்படுத்துங்கள்

### தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் நீதியமைச்சர் விஜயதாஸ



(கொழும்பு)

தங்களுக்குத் தரப்பட்ட தேர்தல் அதிகாரங்களைப் பயன்படுத்துமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

### உலக பாரம்பரியச் சின்னமாக

## மகாவம்ச வரலாற்று நூல்கள் அடங்கிய தொகுப்பு அறிவிப்பு

(கொழும்பு)

பேராதனைப் பல்கலைக்கழக நூலகத்தில் உள்ள இலங்கையின் வரலாற்றின் முக்கிய ஆதாரமான மகாவம்ச வரலாற்று நூல்கள் அடங்கிய 15



## 100 கிலோ மாட்டிறைச்சியுடன் புங்குடுதீவில் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவில் 100 கிலோ மாட்டிறைச்சியுடன் இருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

புங்குடுதீவு மடத்துவெளி கடற்படை முகாமுக்கு அருகே இறைச்சியைக் கடத்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட மாருதிக் காருடன் குறித்த இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடற்படையினரின் உதவியுடன் அப்பகுதி கிராம உத்தியோகத்தர் சிறீதரன் மற்றும் தீவக சிவில் சமூக பிரதிநிதிகளால் யாழ்.ஐந்து சந்திப் பகுதியைச் சேர்ந்த குறித்த இருவரும் மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (ம-7,33)

## கச்சாய் தெற்கில் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கச்சாய் தெற்கு கடற்கரைப் பகுதியில் நேற்று முன் தினம் புதன் கிழமை காலை இளம் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக அடையாளம் காணப் 15

### வைத்தியத்துறை மாபியாக்களுக்கு என்னைப் பிடிக்கவில்லை

## சுகாதார அமைச்சரின் நிகழ்ச்சி ஒரு கண்துடைப்பு நாடகம்

### ஊடக சந்திப்பில் மருத்துவர் அர்ச்சுனா



(யாழ்ப்பாணம்)

வைத்தியத்துறை மாபியாக்களுக்கு என்னைப் பிடிக்கவில்லை. அதனாலேயே என்னை இங்கிருந்து விரட்டுகின்றனர். சுகாதார அமைச்சரின் யாழ்.விஜயம் ஒரு கண் துடைப்பு 15

### நயினாதீவில்

## புத்தர் சிலை திருடிய இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

நயினாதீவில் உள்ள பழைய விகா 15

## தேர்தலை ஒருபோதும் ஒத்திவைக்க முடியாது

### மகிந்த தேசப்பிரிய



(கொழும்பு)

வழக்குத் தொடர்தல் மற்றும் ஏனைய செயற்பாடுகளால் தேர்தலை ஒருபோதும் ஒத்திவைக்க முடியாது எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலை 15

## புலிகள் பாடசாலைகளை மூட இடமளிக்கவில்லை ஆசிரியர்கள் அதனைச் செய்கின்றனர்



### அமைச்சர் மனுச நாணயக்கார

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் யுத்த காலத்தில் பாடசாலைகளை மூட இடமளிக்கவில்லை ஆசிரியர்கள் அதனைச் செய்கின்றனர் என வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் அமைச்சர் மனுச நாணயக்கார தெரிவித்துள்ளார்.

மத்துகம பகுதியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தம் நடந்த 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பட்டிமன்றப் பேச்சாளர்கள்
## ராஜா, பாரதிபாஸ்கர் இன்று வருகை

(யாழ்ப்பாணம்)

அரியாலை சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் இன்று நடைபெறும் இலக்கிய விழாவில் பட்டிமன்றம் புகழ் ராஜா, பாரதிபாஸ்கர் ஆகியோரின் பட்டிமன்றம் இன்று பிற்பகல் 06.30 மணிக்கு அரியாலை சனசமூக நிலைய திறந்த வெளியரங்கில் இடம் பெறும்.

இதேவேளை நேற்று வியாழக்கிழமை யாழ்.கலாசார மத்திய நிலையத்தில் நடைபெறவிருந்த விவாத நிகழ்ச்சி நாளை சனிக்கிழமை (20) காலை 08.30 மணிக்கு இடம் பெறும். (ம)

# கொடிகாமத்தில் இலஞ்சம் வாங்கிய தமிழ் பொலிஸ் உத்தியாகத்தர் கைது

யாழ்ப்பாணம், கொடிகாமம் பகுதியில் இலஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டில் தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று பகல் 11.30 மணியளவில் எழுதுமட்டுவாழ் சோதனைச்சாவடியில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸாரே கைது செய்யப்பட்டார். அவர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் கடமையில் ஈடுபடுபவர்.

இரண்டு லொறிகளில் மணல் ஏற்றிச் சென்றவர்களிடம் 43,000ரூ இலஞ்சமாகப் பெற்ற போது, யாழ்ப்பாணம் விசேட குற்றத்தடுப்பு பொலிஸாரால் கைது செய்து கொடிகாமம் பொலிஸ் நிலையததில் ஒப்படைக்கப்பட்டார்.

அவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்ட பின்னர், மேலதிக விசாரணைக்காக பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரால் அழைத்து செல்லப்பட்டார்.

கைதான பொலிஸ் உத்தியோகத்தர் முல்லைத்தீவை சேர்ந்தவராவார். (ம-7)

# இறைவரித் திணைக்களம் பொறுப்பற்று செயற்படுகின்றது
## கணக்காய்வு அலுவலகம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

உள்நாட்டு இறைவரித் திணைக்களம் பொறுப்பற்று செயற்படுவதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் குற்றம் சுமத்தியுள்ளது.

அரசாங்கத்திற்கு வசூலிக்கப்பட வேண்டிய ஆனால் இதுவரை அறவிடப்படாத வரி தொடர்பில் விசேட கணக்காய்வு அறிக்கையை வெளியிடும் போதே தேசிய கணக்காய்வு அலுவலகம் இதனைக் குறிப்பிட்டுள்ளது.

இதன்போது, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் அறவிடப்பட வேண்டிய வரி உரிய காலத்தில் வசூலிக்கப்படாமையினால் பொதுமக்கள் ஏற்கனவே தியாகம் செய்து அரசாங்கத்திற்கு வருமானமாக செலுத்திய வரியில் பெருமளவிலான வருமானம் தவறாகப் பயன்படுத்தப்படும் அல்லது அரசாங்கத்திற்கு இழப்பு ஏற்படும் அபாயம் இருப்பதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.

உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தனது கடமைகளை உரிய நேரத்தில் மற்றும் அதிகபட்ச வினைத்திறனுடன் நிறைவேற்றத் தவறியதே அரசாங்கத்திற்கு இந்த வரிப்பண இழப்பு ஏற்படுவதற்கு முக்கிய காரணம் எனவும் தேசிய கணக்காய்வு அலுவலகம் சுட்டிக்காட்டியுள்ளது. (ம-7)

# புத்தளத்தில் தும்பு ஏற்றிச் சென்ற லொறி தீயில் எரிந்து நாசம்

புத்தளம் முந்தல் பிரதேசத்தின் மங்கள எளிய - சின்னப்பாடு பிரதான வீதியின் கொத்தாந்தீவு பிரதேசத்தில் தும்பு ஏற்றிச் சென்ற லொறியொன்று நேற்று காலையில் தீப்பிடித்து முழுமையாக எரிந்து நாசமகியுள்ளது.

இதனால் அவ்வீதியின் ஊடான போக்குவரத்து சுமார் இரண்டு மணி நேரம் தடைப்பட்டது.

கொத்தாந்தீவு பிரதேசத்தில் இருந்து நேற்று காலை 11.00 மணியளவில் தும்பு ஏற்றிச் சென்ற லொறியொன்று வீதியில் உள்ள மின்சார வயரை அறுத்துக் கொண்டு பயணித்த நிலையில் லொறியில் இருந்த தும்பில் திடீர் என ஏற்பட்ட தீயினால் தும்பு முழுமையாக எரிந்ததுடன், லொறி பகுதியளவில் எரிந்துள்ளது.

குறித்த தீப்பரவல் காரணமாக பல இலட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கிப்படுகின்றது. (ம-7)

## அதிகார...


தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு எழுத்து மூலம் குறித்த அறிவித்தலை விடுத்துள்ளார். அதில்,

பாராளுமன்ற தேர்தலின் போது, சட்டவிரோதமான செயல்கள், இலஞ்சம், கப்பம் பெறுதல் போன்ற சம்பவங்களுக்கு தற்போதைய விகிதாசார தேர்தல் முறையின் கீழ் சட்டம் செயலிழந்துள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதன்படி, சட்டத்தின் ஆட்சி மாற்றப்பட்டு சட்டத்தின் ஆட்சி நிலைநாட்டப்பட்ட ஜனநாயகத்துக்காக தேர்தல் ஆணைக்குழுவின் பூரண ஆதரவுடன் 2023 ஆம் ஆண்டு 03 ஆம் இலக்க தேர்தல் செலவுகள் ஒழுங்குமுறை சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இதன் காரணமாக எதிர்வரும் தேர்தலுக்கு சட்டத்தை அமுல்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் அமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார். (ம-7)


# கண்ணீர் அஞ்சலி



வலம்புரி நாளிதழின் இலட்சினையை
வடிவமைத்த சித்திரக் கலைஞர்

கலாபூஷணம்
## கணபதிப்பிள்ளை கதிரவேலு
(ஓய்வு பெற்ற ஆசிரியர் – உரும்பிராய்)

அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து மிகுந்த துயர் அடைகின்றோம்.
அவரின் இழப்பினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி!

- வலம்புரி நிர்வாகம்

# 3ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 30-07-1940
இறப்பு 21-07-2021

மட்டக்களப்பு ஊரணியைப் பிறப்பிடமாகவும்
கதிரிப்பாய் அச்சுவேலி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் நடுவில்தம்பி சிவசம்பு
(இளைப்பாறிய கடற்படை வீரர்)

ஆலமரமொன்று அடிசாய்ந்ததோ – வேரோடி
விழுது விட்டபெரு விருட்சமே எமை – பாரோடு
தவிக்கவிட்டு பாதியிலே போனதேனோ
மூன்றாண்டுகள் ஓடி மறைந்தாலும்
உங்கள் உயிர்மூச்சு மறைவதில்லை.
என்றென்றும் உங்கள் நினைவுகளுடன்
ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்போம்.

இல.26/16, கதிரிப்பாய்
பாடசாலை வீதி,
கதிரிப்பாய், அச்சுவேலி.

(168)

தகவல்-
குடும்பத்தினர்
021 226 0303


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத தடைச்சட்டத்தை தொடர்ந்து பயன்படுத்தும் இலங்கை

## சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்துவதை முடிவிற்கு கொண்டுவருவதாக உறுதியளித்துள்ள போதிலும் இலங்கை அதிகாரிகள் தொடர்ந்தும் பயங்கரவாத தடைச்சட்டத்தினை சிறுபான்மை சமூகத்தினருக்கு எதிராக பயன்படுத்துகின்றனர் என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.**



இலங்கை அதிகாரிகள் தாங்கள் முன்வைக்கும் குற்றச்சாட்டுகளிற்கு உரிய ஆதாரங்களை முன்வைக்காத போதிலும் குற்றம் சாட்டப்பட்டவர்களிற்கு எதிராக பயங்கர வாத தடைச்சட்டத்தை பயன்படுத்துகின்றனர்.

கண்மூடித்தனமாக தடுத்து வைத்தல் மற்றும் சித்திரவதைகள் காரணமாக சிலர் பலவருடகாலமாக பாதிக்கப்பட்டுள்ள அதேவேளை சிலர் வழக்குகள் கைவிடப்பட்ட பின்னரும் ஒடுக்குமுறைகளை எதிர்கொள்கின்றனர்.

பயங்கரவாத தடைச்சட்டம் எனப்படும் சட்டம் நபர்களை நீண்ட காலத்திற்கு அதிகாரிகளின் அனுமதியுடன் தடுத்துவைப்பதற்கான ஏற்பாடுகளை கொண்டுள்ளது. நீதிமன்றத்தின் கண்காணிப்பு இன்றி இதனை செய்யலாம் என குறிப்பிட்டுள்ள சர்வதேச மனித உரிமை கண்காணிப் பகம் இந்தச் சட்டம் சித்திரவதைக்கு எதிரான போதிய பாதுகாப்பின்மைகளை கொண்டுள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளது.

2022 இல் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக்கு ஆற்றிய உரையில் அப்போதைய வெளிவிவகார அமைச்சர் பயங்கரவாத தடைச் சட்டத்தை பயன்படுத்துவதை நிறுத்துவதாக உறுதிமொழி வழங்கினார், எனினும் ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் ஆட்சியின் கீழ் பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்றது.

பயங்கரவாத தடைச்சட்டம் பரந்துபட்ட அளவில் பயன்படுத்தப்படுவதால் சிவில் சமூகம் அரசாங்க மட்டத்திலான ஊழல் குறித்து ஆராய முடியாத நிலையில் காணப்படுவதாக 2023 செப்டம்பரில் சர்வதேச நாணய நிதியம் தெரிவித்திருந்தது. கண்காணிப்பகம் பயங்கரவாத தடைச்சட்டத்தினால் ஏற்படும் அச்சநிலை அவ்வாறானது.

இலங்கையின் விரிவான உள்நாட்டு பாதுகாப்பு கட்டமைப்பு இயந்திரம் அப்பாவி மக்களை குறிவைப்பதற்காகவும், விமர்சனங்களில் ஈடுபடுபவர்களை மௌனமாக்குவதற்காகவும் சிறுபான்மை சமூகங்களை இழிவுபடுத்துவதற்காகவும் பயங்கரவாத தடைச் சட்டத்தை பயன்படுத்துகின்றது.

கடந்த காலத்தின் சர்வதேச அழுத்தங்கள் காரணமாக சிறியளவு முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன, இலங்கையின் வெளிநாட்டு சகாக்கள் இலங்கை பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கவேண்டும் என வேண்டுகோள் விடுக்க வேண்டும் என மனித உரிமை கண்காணிப்பகத்தின் ஆசியாவிற்கான பிரதி இயக்குநர் மீனாட்சி கங்குலி தெரிவித்தார். (நி-6)

# ஞானசார தேரருக்கு பிணை நீதிமன்றம் அறிவிப்பு

(கொழும்பு)

நான்கு வருட கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட கல கொட அத்தே ஞானசாரதேரரை பிணையில் விடுவிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டு ஊடகவியலாளர் சந்திப்பின் போது இனங்களுக்கிடையில் வெறுப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஏற்படுத்தியதாக கூறப்படும் சம்பவம்தொடர்பில்கைது செய்யப்பட்ட ஞானசார தேரர் கைது செய்யப்பட்டுஏழு வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது

இதேவேளை அண்மையில் இலங்கையில் சிங்கள பௌத்த தேசியத்திற்காக கலகொடஅத்தே ஞானசார தேரர் கடந்த காலங்களில் குரல் எழுப்பியதாகவும் அவரை பொது மன்னிப்பில் விடுதலை செய்ய வேண்டும் என பிரதான மதகுருக்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி-6)



# தேர்தலுக்கான நிதி தாமதமின்றி வழங்கப்படும்

## நிதியமைச்சு உறுதி

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்காக ஒதுக்கப்பட்ட 10 பில்லியன் ரூபாய், தேர்தல் ஆணைக்குழுவின் தேவைக்கு அமைய, தாமதமின்றி வழங்கப்படுமென நிதி அமைச்சின் செயலாளர் உறுதியளித்துள்ளார்.

இந்த உறுதிமொழியானது நிதி அமைச்சின் செயலாளர் மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழு இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போதே அளிக்கப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் அரசாங்கம் கடுமையான நிதி முகாமைத்துவத்துடன் செயற்படுவதால் குறித்த நிதியை வழங்குவதில் எவ்வித தடையும் இல்லை எனவும் தபால் சேவைகள், அச்சிடும் பணிகள் மற்றும் பாதுகாப்பிற்கான செலவுகளை வழங்க தயாராக உள்ளதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார். (நி-6)



# உலகின் பாரம்பரிய சின்னமாக இலங்கையின் வரலாற்று ஆதாரம்

(கொழும்பு)

பேராதனைப் பல்கலைக் கழக நூலகத்தில் உள்ள இலங்கையின் வரலாற்றின் முக்கிய ஆதாரமான மகாவம்ச சரித்திரம் அடங்கிய புத்தகங்களின் தொகுப்பு உலக பாரம்பரியச் சின்னமாக அறிவிக்கப்பட்டது.

குறித்த அறிவிப்பு நேற்று வெளியிடப்பட்டது. யுனெஸ்கோ பணிப்பாளர் நாயகத்தினால் மகாவம்சத்தை உலக மரபுரிமைச் சின்னமாக அறிவித்ததற்கான சான்றிதழ் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வேந்தர் ஜி.எச். பீரிஸிடம் கையளிக்கப்பட்டது.

இந்த விழாவிற்கு பிரதம விருந்தினராக யுனெஸ்கோவின் தலைமை இயக்குநர் கலந்து கொண்டார்.

இந்நிலையில் துணை வேந்தர் எம்.டி.லாமாவன்ச பல்கலைக்கழகத்திற்கு விஜயம் செய்ததைக் குறிக்கும் வகையில் அவருக்கு நினைவுச் சின்னம் ஒன்றும் வழங்கி வைக்கப்பட்டது. (நி-6)

# ஜனாதிபதித் தேர்தல் கண்காணிப்பு பணிகளுக்காக 8000 பணியாளர்கள்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் கண்காணிப்பு பணிகளுக்காக சுமார் 8000 பேர் கடமையில் ஈடுபடுத்தப்பட உள்ளதாக தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் அமைப்பு அறிவித்துள்ளது.


பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

ஆரம்ப கண்காணிப்பாளர்கள் ஏற்கனவே கடமையில் அமர்த்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

தபால் மூல வாக்களிப்பு கண்காணிப்பாளர்கள், வாக்களிப்பு நிலைய கண்காணிப்பாளர்கள், தேர்தல் நிலைய கண்காணிப்பாளர்கள் என பல்வேறு கட்டங்களாக கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் நீண்ட கால அடிப்படையில் இரண்டாயிரம் கண்காணிப்பாளர்கள் பணியில் அமர்த்தப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



### தேசிய மட்ட

# கோலூன்றி பாய்தலில் யாழ்.மாணவன் புதிய சாதனை

**48ஆவது தேசிய மட்ட தடகளப் போட்டியில் ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் வடமாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்த சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவன் அருந்தவராசா புவிதரன் புதிய சாதனையைப் பதிவு செய்துள்ளார்.**


அகில இலங்கை தேசிய மட்ட மாகாணங்களுக்கு இடையிலான ஆண்கள் பெண்களுக்கான தடகள போட்டிகள் கொழும்பு ராஜபக்ஷ மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இதில் ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் வடமாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்த சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவன் அருந்தவராசா புவிதரன் 5.12 மீற்றர் உயரம் பாய்ந்து புதிய சாதனையைப் பதிவு செய்து தங்கப் பதக்கத்தை கைப்பற்றியுள்ளார்.

கடந்த ஆண்டு தென்னிலங்கை வீரரினால் 5.11 மீற்றர் சாதனையாக காணப்பட்ட உயரத்தையே இவர் இவ்வாண்டு முறியடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(நி-6-90)

# தட்டெறிதல் போட்டியில் மிதுன்ராஜ் வெள்ளிப்பதக்கம்



48 ஆவது தேசிய மட்ட தடகள போட்டியில் வடமாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.மிதுன்ராஜ் வெள்ளிப் பதக்கத்தை கைப்பற்றியுள்ளார்.

அகில இலங்கை மாகாணங்களுக்கு இடையிலான தேசிய மட்ட தடகளப் போட்டிகள் கொழும்பு ராஜபக்ஷ மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இதில் ஆண்களுக்கான தட்டெறிதல் போட்டியில் வடமாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.மிதுன்ராஜ் 45.29 மீற்றர் தூரம் எறிந்து வெள்ளிப் பதக்கத்தை கைப்பற்றியுள்ளார். (நி-6-90)

# உபாதையால் மெஸ்சி மேஜர் லீக் ஆகுவது சந்தேகம்

கணுக்கால் காயத்தால் பாதிக்கப்பட்டுள்ள மெஸ்சி, இன்டர் மயாமி அணிக்காக 2 போட்டிகளில் விளையாடுவது சந்தேகம்.

அமெரிக்காவில் நடந்த "கோபா அமெரிக்கா" கால்பந்து பைனலில் மெஸ்சி தலைமையிலான அர்ஜென்டினா அணி, கொலம்பியாவை வீழ்த்தி 16ஆவது முறையாக கோப்பை வென்றது. இப்போட்டியில் வலது கணுக்காலில் காயமடைந்த மெஸ்சி கண்ணீருடன் பாதியில் வெளியேறினார்.

இவர், அமெரிக்காவில் நடக்கும் மேஜர் லீக் கால்பந்து தொடரில் இன்டர் மயாமி அணிக்காக விளையாடி வருகிறார். மயாமி அணி தனது அடுத்த இரு போட்டிகளில் சிகாகோ (ஜூலை 21) அணிகளை எதிர்கொள்கிறது. தற்போது கணுக்கால் காயத்துக்கு சிகிச்சை மேற்கொண்டு வரும் மெஸ்சி இவ்விரு போட்டிகளில் பங்கேற்பது சந்தேகம். நடப்பு சீசனில் இன்டர் மயாமி சார்பில் 12 போட்டியில் விளையாடிய மெஸ்சி, 12 கோல் அடித்துள்ளார். சகவீரர்கள் 13 கோல் அடிக்க உதவினார். மெஸ்சி விரைவில் குணமடைந்து விரைவில் போட்டியில் பங்கேற்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. (நி-6)



# நாவாந்துறை சென்மேரிஸ் இறுதிப் போட்டிக்கு தகுதி



குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகம் தமது வைரவிழாவை முன்னிட்டு நடத்தும் கால்பந்தாட்ட போட்டியில் நாவாந்துறை சென்மேரிஸ் அணி இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழகம் தமது வைரவிழாவை முன்னிட்டு நடத்தும் கால்பந்தாட்ட போட்டியின் முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் நாவாந்துறை சென்மேரிஸ் அணியை எதிர்த்து சென்நீக்கிளஸ் அணி மோதியது.

முதல் பாதியாட்டத்தில் சென்நீக்கிளஸ் அணி வீரர் விக்னேஷ் ஒரு கோலைப் பதிவு செய்ய சற்றும் சளைக்காமல் போராடிய சென்மேரிஸ் அணி பலத்த போராட்டத்தில் ஜெ.ஜெறிங்சன் ஒரு கோலைப் பதிவு செய்து கோல்களின் எண்ணிக்கையை சமநிலைபடுத்தினர்.

இரண்டாவது பாதியாட்டத்திலும் இரு அணிகளும் சம பலத்துடன் மோதினர். இதனால் இரு அணிகளாலும் மேலதிக கோல் எதனையும் பெற முடியவில்லை.

இதனால் சமநிலை தவிர்ப்பு உதைமூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் சென்மேரிஸ் அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றுள்ளனர்.

(நி-6-90)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு!

## யாழில் மட்டும் 4004 தொற்றாளர்கள்

(கொழும்பு)

**நாட்டில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகத் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.**

இவ்வருடத்தின் இது வரையான காலப்பகுதிக்குள் நாட்டில் 30,663 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் 12 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளன.

அதிகளவான டெங்கு நோயாளர்கள் கொழும்பு மாவட்டத்திலிருந்து பதிவாகியுள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 7,119 ஆகும்.

மேலும், யாழ்ப்பாணம் மாவட்டத்திலிருந்து 4,004 டெங்கு நோயாளர்களும் கம்பஹா மாவட்டத்திலிருந்து 3,199 டெங்கு நோயாளர்களும் களுத்துறை மாவட்டத்திலிருந்து 1,690 டெங்கு நோயாளர்களும் கண்டி மாவட்டத்திலிருந்து 2,484 டெங்கு நோயாளர்களும் குருணாகல் மாவட்டத்திலிருந்து 1,321 டெங்கு நோயாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நாட்டில் தற்போது நிலவும் சீரற்ற கால நிலை காரணமாக டெங்கு நோய் பரவக்கூடிய வாய்ப்பு அதிகரித்துள்ளதாகவும் இதனால் பொதுமக்கள் அனைவரும் தங்களது சுற்றுப்புறச் சூழலைச் சுத்தமாக வைத்திருக்குமாறும் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (நி-6)

# அரசமைப்பு திருத்தங்கள் இனி இல்லை- அமரவீர

(கொழும்பு)

எதிர்வரும் வாரங்களில் பாராளுமன்றத்தில் அரசமைப்புத்திருத்தம் தொடர்பான எதனையும் சமர்ப்பிக்கப்போவதில்லை என அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் திட்டமிட்டபடி நடக்கும் என தெரிவித்துள்ள அவர் 19 ஆவது திருத்தத்தில் காணப்படும் குறைபாடுகளிற்கு தீர்வை காண்பதற்கான திருத்தங்களை தேர்தலிற்கு பின்னர் பரிசீலிக்கலாம் என அவர் தெரிவித்துள்ளார். தேர்தல்களை தாமதிக்கும் நோக்கிலேயே அரசமைப்பு திருத்தங்கள் கொண்டுவரப்படுகின்றன என எதிர்க்கட்சியினர் தெரிவிப்பதை அவர் நிராகரித்துள்ளார். (நி-6)


லங்கா மஹால் (PVT) LTD
DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719
Western Union WU MoneyGram Ria Money Transfer
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974


# இராசிபலன்

19.07.2024
ஆடி 03, வெள்ளிக்கிழமை
திரயோதசி முன்னிரவு 6.58 மணிவரை
மூலம் பின்னிரவு 3.02 மணிவரை

சுபநேரம்-6.01-7.31 மணிவரை
இராகுகாலம்-10.31-12.01 மணிவரை
பிரதோச விரதம், அமிர்த சித்தம்

சந்திராஷ்டமம்
பரணி.

வளவன்



**மேஷம்** இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பூர்வீகச் சொத்து தொடர்பில் நன்மையுண்டு, மறைமுகப் போட்டிகளை சமாளிப்பீர்கள்.



**ரிஷபம்** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, மனக்குழப்பம் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது.



**மிதுனம்** பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.



**கடகம்** வரவேண்டிய பாக்கிகள் வந்துசேரலாம், சச்சரவை விட்டு சாதித்துக் காட்டுவீர்கள், உடல் நலன் சீராகும், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், காரிய அனுகூலமுண்டு.



**சிம்மம்** உள்ளம் மகிழும் சம்பவம் குடும்பத்தில் நிகழலாம், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள்.



**கன்னி** பேச்சில் கனிவு பிறக்கும் பொருளாதார நிலையுயர என்ன வழி என்று யோசிப்பீர்கள், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் தகவல்கள் வந்து சேரலாம்.



**துலாம்** ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்குவதில் நாட்டம் செல்லும், உறவினர் வழியில் நன்மையுண்டு.



**விருச்சிகம்** உறவினர் சந்திப்பு உண்டு, நண்பர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வாய்ப்புகள் உங்களைத் தேடி வரலாம், சுப செய்திகள் வந்து சேரலாம்.



**தனுசு** மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, காரிய வெற்றிக்கு இஷ்ட தெய்வத்தை வணங்க வேண்டிய நாள், உணவில் கட்டுப்பாடு தேவை.



**மகரம்** வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள்.



**கும்பம்** தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வருமானம் திருப்தி தரும்.



**மீனம்** பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், குடும்ப மகிழ்ச்சி கூடும், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சி கைகூடும்.

**தர்மம் செய்ததும் புசித்ததும் தான் ஒருவருக்குச் சொந்தம்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புங்குடுதீவுப் பகுதியில் பசுவதை எச்சங்கள் அடையாளம்

**(யாழ்ப்பாணம்)**

**புங்குடுதீவில் திருடர்களால் இறைச்சிக்காக பசுக்கள் வெட்டப்படுவது அதிகரித்துள்ள நிலையில் அதனை தடுக்க பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

புங்குடுதீவு ஜே/22 கிராம சேவகர் பிரிவுக்கு உட்பட்ட வரதீவு பகுதியில் அப்பகுதி அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம சேவகர் தலைமையிலான குழுவினர் பற்றைக் காட்டினை சுற்றி வளைத்த போது சட்டவிரோதமான முறையில் பசு ஒன்றினை இறைச்சியாக்கி கொண்டிருந்த இருவர் தப்பி ஓடியுள்ளனர்.

குறித்த காட்டுப்பகுதியில் பல கால்நடைகள் சட்டவிரோதமாக இறைச்சியாக்கப்பட்டமை தெரியவந்துள்ளது.

அண்மைக்காலமாக சட்டவிரோத செயற்பாடுகள் குறைந்த நிலையில் மீண்டும் இவ்வாறான அசம்பாவிதங்கள் ஏற்படுவதைத் தடுக்க பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-6)

## மோசடி வழக்கில் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)


வெளிநாட்டு ஆசைகாட்டி 47 லட்சம் ரூபாய் மோசடியில் ஈடுபட்ட கிழக்குப் பல்கலைக்கழகத்தின் அலுவலர் ஒருவர் யாழ்.மாவட்ட விசேட குற்ற விசாரணை பிரிவினரால் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

வெளிநாட்டுக்கு அனுப்புவதாகத் தெரிவித்து மோசடியில் ஈடுபட்ட இளம் பெண்ணொருவர் ஏற்கனவே கைது செய்யப்பட்ட நிலையில் அந்த யுவதியை வழிநடத்திய பிரதான குற்றவாளியாக கைதான அந் நபர் காணப்படுகின்றார்.

அந்தப் பெண் பல்வேறு நபர்களிடம் இருந்து பெறப்பட்ட ஆறு கோடி ரூபாயிற்கும் மேற்பட்ட நிதியை தற்போது கைதாகியுள்ள சந்தேகநபரின் வங்கிக் கணக்கில் செலுத்தியமையும் பொலிஸ் விசாரணைகளின்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (நி-6-33)

# தமிழர்களுக்கு தீர்வு வழங்க எந்த அரசும் தயாரில்லை

## சித்தார்த்தன் எம்.பி தெரிவிப்பு



(குருமன்காடு)

தமிழ் மக்கள் ஒற்றுமையாக இருக்கின்றோம் என்பதை உலகிற்கு காட்டுவது தான் தங்களது விருப்பம். அது தான் பொது வேட்பாளர் குறித்ததான விடயம் என புளொட் அமைப்பின் தலைவரும் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

சகல வழிகளிலும் தமிழ் மக்கள் மிகப் பெரிய பின்னடைவை சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். பொருளாதாரம், அரசியல், கல்வி, எண்ணிக்கை என நீண்டு செல்வதாகவும், அண்மைக் காலமாக இந்தியா, கனடா, அவுஸ்ரேலியா என பல நாடுகளுக்கு அதிகளவில் மக்கள் சென்றுள்ளதாகவும் இந்த நிலை தொடருமானால் தமிழ் மக்களை பின்னடைவுக்கும் படுபாதாளத்திற்கும் கொண்டு செல்லும் எனவும் தெரிவித்தார்.

அத்தோடு பேச்சுவார்த்தை என்று வருகின்ற போது ஜனாதிபதி கூட புலம்பெயர் தமிழ் மக்களுடன் பேச வேண்டும் என கூறுவதாகவும் அவர்களிடம் இருக்கக் கூடிய அந்த பொருளாதார பலத்தை இங்கு கொண்டு வரலாம் எனவும் சிந்திக்கிறார் எனவும் குறிப்பிட்டுள்ளார். ஆனாலும் தொடர்ந்து வருகின்ற எந்தவொரு அரசாங்கமும் தமிழ் மக்களுக்கு நியாயமான ஒரு தீர்வை கொடுக்க தயாரில்லை என சுட்டிக்காட்டியமை குறிப்பிடத்தக்கது. (நி-6-250)

## இடையூறு விளைவித்தவர் பிணையில் விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழில் சுகாதார அமைச்சர் பங்கேற்ற கலந்துரையாடலில் குழப்பம் விளைவித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நபரை 75 ஆயிரம் ரூபாய் சரீர பிணையில் செல்ல மன்று அனுமதித்ததுடன் வழக்கினை நாளை மறுதினம் வரை ஒத்திவைத்தது.

வடக்கு மாகாணத்தின் சுகாதார மேம்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் வடக்கு மாகாண சபை கேட்போர் கூடத்தில் சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற போது குழப்பத்தில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் சாவகச்சேரி பொலிஸாரால் குறித்த நபர் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட நபரை விசாரணைகளின் பின்னர் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் முற்படுத்திய போதே அந்நபரை பிணையில் செல்ல நீதிமன்று அனுமதித்தது. (நி-6-33)

## மின்விளக்குகள் பொருத்தி வைப்பு

(கரணவாய்)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளிலும் கரணவாய் பகுதிகளில் மின் விளக்குகள் இல்லாத வீதிகளுக்கு மின் விளக்குகள் பொருத்தும் நடவடிக்கையில் நேற்று பிரதேச சபையினர் ஈடுபட்டனர். (நி-6-60)

## கருகம்பனையில் இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

கருகம்பனை தமிழ் மன்ற சனசமூக நிலையம் மற்றும் இந்து இளைஞர் கழகம், இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் என்பன இணைந்து நடத்தும் 24 ஆவது இரத்த தான முகாம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 3 மணிவரை கருகம்பனை கலாசார மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

எனவே குறித்த இரத்த தான முகாமில் குருதிக் கொடை தன்னார் வலர்களை கலந்து கொண்டு குருதித் தானம் வழங்குமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (நி-6)

## திருவாசக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை சிவபூமி தேவார மடத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5 மணிக்கு திருவாசக முற்றோதல் படிப்பும் அதனைத் தொடர்ந்து மகேஸ்வர பூஜை நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன. (நி-6)

# சட்டவிரோத விகாரைக்கு எதிராக தையிட்டியில் இன்று போராட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரின் ஏற்பாட்டில் தையிட்டி சட்டவிரோத விகாரைக்கு எதிரான போராட்டம் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணி தொடக்கம் நாளை மாலை வரை முன்னெடுக்கப்படவுள்ளது.

தையிட்டி சட்டவிரோத விகாரையை அகற்ற வலியுறுத்தியும் பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகளை உரிமையாளர்களிடம் மீள ஒப்படைக்க வேண்டும் எனக்கோரியும் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இப்போராட்டத்தில் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கட்சியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் அழைப்பு விடுத்துள்ளார். (நி-6-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடளாவிய ரீதியில் சுற்றிவளைப்பு நடவடிக்கைகள்

## நுகர்வோர் அதிகாரசபை எச்சரிக்கை

**(கொழும்பு)**

**எரிபொருள், சமையல் எரிவாயு மற்றும் மின்சாரம் போன்றவற்றின் விலைகள் குறைக்கப்பட்டுள்ள போதிலும் நுகர்வோருக்கு சலுகைகளை வழங்காத வர்த்தகர்களைக் கண்டுபிடிக்க நுகர்வோர் அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.**

அதற்கமைவாக எதிர் வரும் நாட்களில் நாடளாவிய ரீதியில் சுற்றி வளைப்புகளை மேற்கொள்ளுமாறு நுகர்வோர் அதிகார சபையின் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக அதன் தலைவர் துசித இந்திரஜித் உடுவர தெரிவித்துள்ளார்.

இதன்படி நாடளாவிய ரீதியில் உள்ள உணவகங்கள், சிற்றுண்டிச் சாலைகள் மற்றும் ஏனைய வர்த்தக நிலையங்களில் தொடர்ச்சியாக சோதனைகளை மேற்கொள்ளுமாறும் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் மற்றும் காட்சிப்படுத்தப்பட்ட விலைகள் தொடர்பில் விசேட அவதானத்துடன் சோதனைகளை மேற்கொள்ளுமாறும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக துசிதஇந்திரஜித் உடுவர மேலும் தெரிவித்துள்ளார். (நி-6)

## திஸ்ஸ பயணித்த வாகனம் விபத்து



(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க பயணித்த ஜீப் ஜாவத்தை வீதியில் விபத்துக்குள்ளாகியுள்ளதாக நாரஹேன்பிட்டி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தில் பாராளுமன்ற உறுப்பினர் உட்பட 3 பேர் காயமடைந்துள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினரின் ஜீப்பும் காரும் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மேலும் காயமடைந்தவர்களில் காரின் சாரதி மற்றும் பயணி ஒருவரும் அடங்குவதாகவும் மூவரும் நார ஹேன்பிட்டி தனியார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி-6)

## தேர்தல் ஆணைக்குழுவுடனான ஐ.தே.வின் சந்திப்பு

# சந்தேகம் வெளியிடும் சஜித் தரப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கும் தேர்தல்கள் ஆணைக்குழு அதிகாரிகளுக்கும் இடையில் அண்மையில் இடம்பெற்ற சந்திப்பு குறித்து ஐக்கிய மக்கள் சக்தி சந்தேகம் வெளியிட்டுள்ளது.

எனவே ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் அதன் தவிசாளரும் தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்களுடன் நடத்திய கலந்துரையாடல் தொடர்பில் வெளிப்படைத்தன்மை அவசியம் என பாராளுமன்ற உறுப்பினர் மயந்த திஸாநாயக்க வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் ஒரே அமைச்சரவையைச் சேர்ந்த இருவர் ஜனாதிபதிப் பதவிக்கு போட்டியிடும் குறிப்பிடத்தக்க முதல் நிகழ்வாக அமையும் என திஸாநாயக்க குறிப்பிட்டார்.

அமைச்சர் விஜேதாச ராஜபக்சவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான கூட்டணியில் போட்டியிடுவார் என்ற எதிர்பார்ப்பை மையப்படுத்தி இந்த கருத்தை மயந்த திஸாநாயக்க வெளியிட்டுள்ளார். (நி-6)

# இலங்கையை விட்டு வெளியேறிய ஆயிரக்கணக்கான வைத்தியர்கள்

## சுகாதார அமைச்சர் தகவல்



(கொழும்பு)

1300 வைத்தியர்களும் 500 இற்கும் மேற்பட்ட தாதியர்களும் இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார். யாழ். வருகையின் போது மேற்படி கருத்தை தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், "தற்போது இலங்கையில் 24 ஆயிரம் அரச வைத்தியர்கள் இருக்கின்றார்கள் இதில் 3500 பேர் வைத்தியர்களாக வெளியேறவுள்ள நிலையில் அவர்களுக்கான வைத்தியர் நியமனங்களை வெகுவிரைவில் வழங்கவுள்ளோம். ஒவ்வொரு ஆண்டும் 3000 பேர் வைத்தியர்களாக வெளியேறுகின்றமையினால் அரச வைத்தியசாலையில் நிலவும் வைத்தியர் வெற்றிடங்களை நிரப்பக் கூடியதாக இருக்கின்றது.

தற்போது 24 ஆயிரம் வைத்தியர்கள் அரச வைத்தியசாலைகளில் பணிபுரிகின்றனர் எனினும் தற்போது துறைசார்ந்த வைத்திய நிபுணர்கள் நாட்டை விட்டு வெளியேறியமை பெரும் பிரச்சினையாகக் காணப்படுகின்றது.

துறைசார்ந்த வைத்திய நிபுணர்களின் பற்றாக்குறை காரணமாக நாட்டின் சில இடங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. எனினும் கடந்த சில மாதங்களில் நாட்டை விட்டு வெளியேறிய 10 - 15 வரையிலான வைத்தியர்கள் நாட்டுக்கு மீளவும் வருகை தந்து மீண்டும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர் இது எமக்கு நல்ல ஆரோக்கியமான விடயமாக அமைந்திருக்கின்றது" என அவர் தெரிவித்துள்ளார். (நி-6)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை


| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>12 இல் சூரி செவ்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:Bsc(Hons), Surveyor<br>எதிர்பார்ப்பு: Degree Holder (Maths/ Science)<br>தொ.இ: B/14671 | பிறப்பு: 1998 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி<br>12 இல் செவ்<br>உயரம்: 5<br>தகைமை/தொழில்: Networking Engineer<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/14020 |
| பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 62<br>7 இல் செவ்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L, Timekeeper<br>எதிர்ப்ாா்ப்பு: நற்குணமுள்ள மணமகள்<br>தொ.இ: B/14674 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 19<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: Bsc, MPhil(Reading)<br>எதிர்பார்ப்பு: Engineer<br>தொ.இ: G/14028 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 9 1/2<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:HNDE (Eng). உணவு உற்பத்தி நிறுவன உரிமையாளர்<br>எதிர்பார்ப்பு: ஆசிரியர்<br>தொ.இ: B/14675 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>1 இல் செவ்<br>கி.பா: 59<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: MLS<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer<br>தொ.இ: G/14271 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# சீனாவில் வணிக வளாகத்தில் தீ
# 16 பேர் உயிரிழப்பு




(பீஜிங்)
சீனாவில் வணிக வளாகமொன்றில் ஏற்பட்ட தீவிபத்து காரணமாக 16 பேர் உயிரிழந்துள்ளனர்.
சீனாவின் சிச்சுவான் மாகாணத்தின் சிகொங் நகரில் இந்த தீவிபத்து இடம்பெற்றுள்ளது.
14 மாடிக்கட்டடத்திலிருந்து பெரும்புகை மண்டலம் வெளிவருவதை காண்பிக்கும் படங்களும் வீடியோக்களும் வெளியாகியுள்ளன.
வணிகவளாகத்தின் பல்கனிகளில் பெருமளவு மக்கள் காணப்படுவதையும் காணமுடிந்துள்ளது.
வணிகவளாகத்திற்கு 300 இற்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்களையும் வாகனங்களையும் அனுப்பியதாகவும் 39 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர் எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
கட்டுமானப்பணிகளின் காரணமாகவே தீவிபத்து ஏற்பட்டமை ஆரம்பகட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளதாக அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.
சீனாவில் இவ்வாறான சம்பவங்கள் வழமையானவை. பொதுவான பாதுகாப்பு தராதரங்கள் பின்பற்றப்படாமையே இதற்கு காரணம், ஜனவரியில் தீவிபத்தில் 39 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# சைக்கிள் ஓட்டுங்க ஆயுளை கூட்டுங்க
## ஆய்வில் வெளியான தகவல்



(டில்லி)
சைக்கிள் ஓட்டுவதால் முன்கூட்டியே மரணமடைவது 47 சதவீதம் குறைகிறது என ஆய்வு ஒன்றில் தெரியவந்துள்ளது. இதனால் சைக்கிள் பயன்படுத்துவதை அதிகரித்தால் ஆயுள் நாட்கள் அதிகரிக்கும் என்பது உறுதியாகி உள்ளது.
வீட்டுக்கு அருகில் இருக்கும் கடை முதல், தூரமாக இருக்கும் கடை வரை எங்கு சென்றாலும் பைக்கில் செல்வது தற்போது வழக்கமாகி விட்டது. முந்தைய காலங்களில் சைக்கிள் ஓட்டி, வியர்வை சிந்தி நாம் சென்றடைய வேண்டிய இடத்திற்கு செல்லும் நிலை தற்போது தலைகீழாக மாறி விட்டது. இந்நேரத்தில் சைக்கிள் பயன்படுத்துவதை அதிகரித்தால் ஆயுள் நாட்கள் அதிகரிக்கும் என ஆய்வு ஒன்றில் தெரியவந்துள்ளது.
16 வயது முதல் 74 வயதுக்குட்பட்ட 82 ஆயிரம் பேரை 18 ஆண்டுகளாக பிரிட்டன் ஆய்வாளர்கள் கண்காணித்து ஆய்வு ஒன்று நடத்தி உள்ளனர். இந்த ஆய்வு குறித்த தகவல்கள் பி.எம்.ஜி பப்ளிக் ஹெல்த் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ளது.
அந்த கட்டுரையில் கூறியிருப்பதாவது, சைக்கிள் பயன்படுத்துபவருக்கு, மற்றவர்களை காட்டிலும் முன் கூட்டியே மரணம் ஏற்படும் அபாயம் 47 சதவீதம் குறைவாக உள்ளது.
அதேபோல் புற்றுநோயால் உயிரிழப்பது 51 சதவீதமும் இருதய கோளாறுகளால் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவது 24 சதவீதமும் மனநல கோளாறு ஏற்படுவது 20 சதவீதமும் குறைவாக உள்ளது எனவும் அதில் கூறப்பட்டுள்ளது. (நி-6)

# 44.6 மில்லியன் அமெரிக்க டொலருக்கு ஏலம் போன டைனோசர் எலும்புக்கூடு



(வோஷிங்டன்)
அமெரிக்காவில் டைனோசர் எலும்புக்கூடு 44.6 மில்லியன் அமெரிக்க டொலருக்கு ஏலம் போய் உள்ளது. மேற்கு அமெரிக்க மாகாணமான கொலராடோவில் மோரிசன் அகழ்வாராய்ச்சி தளத்தில் கடந்த 2022 ஆம் ஆண்டு தாவரத்தை உண்ணும் ஸ்டெகோசொரஸ் என்ற டைனோசரின் புதைப் படிவம் கண்டுபிடிக்கப்பட்டது.
இதை ஜேசன் கூப்பர் என்பவர் கண்டுபிடித்தார். இந்த டைனோசருக்கு அபெக்ஸ் என்று பெயரிடப் பட்டது. ஸ்டெகோசொரஸ் டைனோசர் 11 அடி உயரமும் மூக்கிலிருந்து வால் வரை 27 அடி நீளமும் கொண்டது. இந்த டைனோசரின் எலும்புக்கூடு அமெரிக்காவின் நியூயோர்க்கில் உள்ள சோதேபிஸ் ஏல நிறுவனத்தில் ஏலம் விடப்பட்டது.
இதில் 7 பேர் பங்கேற்று ஏலம் கேட்டனர். இதில் டைனோசரின் எலும்புக்கூடு 44.6 மில்லியன் அமெரிக்க டொலருக்கு ஏலம் போனது. இதுகுறித்து சோதேபிஸ் ஏல நிறுவனம் கூறும்போது, இதுவரை ஏலத்தில் விற்கப்பட்டவற்றில் மிகவும் மதிப்புமிக்க புதைபடிவமாக அபெக்ஸ் உள்ளது. இந்த புதை படிவம் அதன் விற்பனைக்கு முந்தைய மதிப்பீட்டை விட 11 மடங்கு அதிகமாகும்.
இதுவரை கண்டு பிடிக்கப்பட்ட மிகப்பெரிய ஸ்டீகோசொரஸ் வகை டைனோசரின் புதைபடிவம் இது வாகும் என்று தெரிவித்தது. (நி-6)


# காச
# 81
## பேர்

(ஜெனீவா)
கடந்த 24 ம
வீடுகள் மற்றும்
இஸ்ரேலால் நட
பேர் கொல்லப்ப



காசாவில் பாலஸ்தீனிய அகதிகளுக்கான ஐ.நா அமைப்பு நடத்தும் பள்ளிகள் இஸ்ரேலிய

# பைடனுக்கு
# கொரோன



(வோஷிங்டன்)
அமெரிக்க ஜனாதிபதி ஜோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவில் ஒரே நாளில்
# பேர் உயிரிழப்பு!

## விதிகளை மீறும் இஸ்ரேல்

**மணி நேரத்தில் காசாவில் உள்ள ம் ஐ.நா வளாகங்களை குறிவைத்து டத்தப்பட்ட தாக்குதல்களில் சுமார் 81 பட்டுள்ளனர்.**





குண்டுவீச்சிலிருந்து தப்பிச் செல்லும் பொதுமக்களுக்கு புகலிடமாக உள்ளன.

ஆனால் இந்தப் பள்ளிகள் மீதும் இஸ்ரேல் தொடர் தாக்குதலை நடத்தி வருகின்றது.

அத்துடன் உலக சுகாதார அமைப்பு ஒக்டோபர் 7 முதல் ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனிய பிரதேசத்தில் உள்ள சுகாதார நிலையங்கள் மீது 1,000 இற்கும் மேற்பட்ட தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக ஆவணப்படுத்தியுள்ளது.


இந்த நிலையில் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் இஸ்ரேல் நடத்தும் தாக்குதலானது பாலஸ்தீனியர்களுடனான இரு நாட்டுத் தீர்விற்கான அனைத்து வாய்ப்புக்களையும் அழிக்கும் என்று ஐ.நா பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ் கூறியுள்ளார்.

ஒக்டோபர் 7 முதல் காசா மீதான இஸ்ரேலின் தாக்குதலில் குறைந்தது 38,794 பேர் கொல்லப்பட்டு 89,364 பேர் காயமடைந்துள்ளனர்.

ஒக்டோபர் 7 அன்று ஹமாஸ் தலைமையிலான தாக்குதல்களில் இஸ்ரேலில் 1,139 பேர் கொல்லப்பட்டனர். அத்தோடு ஆயிரக்கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

"காசாவில் அனைத்துப் போர் விதிகளும் மீறப்பட்டுள்ளன" என்று UNRWA தலைவர் பிலிப் லஸ்ஸரினி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## கு மீண்டும்
## னா தொற்று



பைடனுக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

81 வயதான பைடனுக்கு இதற்கு முன்னர் இரண்டு முறைகள் கொரோனாத் தொற்று ஏற்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் சிறியளவிலான நோய் அறிகுறிகளுடன் தற்போது மூன்றாவது முறையாகவும் அவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கொரோனாத் தொற்றுக் காரணமாக அரசியல் பிரசாரக் கூட்டங்களை அவர் இரத்து செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (நி-6)

## அடங்காத ஹவுதி கிளர்ச்சியாளர்கள் செங்கடலில் தொடரும் பதற்றம்

(ஜெருசலேம்)

செங்கடலில் பயணித்த லைபீரியா மற்றும் பனாமா நாட்டுக் கப்பல்கள் மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் ஏவுகணை தாக்குதல் நடத்தியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

குறித்த தகவலை இங்கிலாந்து கடற்படையினர் வெளியிட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இந்த தாக்குதலினால் ஏற்பட்ட சேத விபரங்கள் எதுவும் வெளிவரவில்லை என்பதுடன் இதனால் மீண்டும் செங்கடல் பகுதியில் பதற்றம் அதிகரித்துள்ளது.



இந்த நிலையில் இஸ்ரேல் போரில் ஹமாஸ் அமைப்பினருக்கு ஆதரவாக ஏமனில் உள்ள ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தொடர்ந்து செயற்பட்டு வருகின்றனர்.

இதன் காரணமாக செங்கடல் வழியாகச் செல்லும் இஸ்ரேல் தொடர்புடைய கப்பல்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை செங்கடலில் தொடரும் ஹவுதி கிளர்ச்சியாளர்களின் அத்துமீறல்களை தடுப்பதற்கு அமெரிக்கா தலைமையில் ஒரு கூட்டுப்படை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுவரெலியாவில் அதிக பனிமூட்டம் பொலிஸார் எச்சரிக்கை விடுப்பு

(ஹற்றன்)

நுவரெலியா மற்றும் அதனைச் சுற்றியுள்ள பல பகுதிகளில் அதிக பனிமூட்டம் காணப் படுவதால் பொது மக்கள் மற்றும் சாரதிகள் அவதானமாக இருக்குமாறு அனர்த்த முகாமைத்துவ பிரிவு மற்றும் போக்குவரத்து பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த நாட்களில் நிலவும் சீரற்ற கால நிலை காரணமாக சாந்திபுர, மகஸ்தோட்டை, பட்டிபொல, கந்தபொல உட்பட பல பிரதேசங்களில் கடும் காற்றுடன் கடும்பனிமூட்டம் காணப் படுவதால் வீதிகளில் பயணிக்கும் போதும்,

வாகனங்களை பாவிக் கும் போதும் அவதானத்துடன் செயற்படுமாறு நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவம் அறிவித் துள்ளது.

மேலும், நுவரெலியா பிரதேசத்திற்கு வருகை தரும் சாரதிகள் மற்றும் ஏனைய அனைத்து சாரதிகளும் பனிமூட்டமான பிரதேசங்களில் பயணிக் கும் போது உரிய ஒளி சமிக்ஞைகளை பயன் படுத்தி பாதுகாப்பான வேகத்தில் வாகனத்தை செலுத்துமாறு நுவரெலியா போக்கு வரத்து பொலிஸார் மேலும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

வீதியின் இருபுறங் களிலும் மரங்கள், மின் கம்பங்கள் முறிந்து விழும் அபாயம் உள்ளதால் பாதசாரிகள் மற்றும் பொதுமக்கள் அவதானத்துடன் செயற் படுமாறும் அனர்த்த முகாமைத்துவ பிரிவு கேட்டுக் கொண்டுள் ளது. (நி-6)

# மின்சார வாகன இறக்குமதி தொடர்பில் ஆராய்வு

(கொழும்பு)

எதிர்வரும் ஒகஸ்ட் மாதத்திற்குள் வாகனங்களை இறக்குமதி செய்யும் விதம் தொடர்பிலான செயற்பாடுகளை ஆரம்பிக்க முடியும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

மேலும் கருத்து தெரிவித்த நிதி இராஜாங்க அமைச்சர்,

அதிக மின்சார வாகனங்களை கொண்டு வருவதில் கவனம் செலு த்தி வருகிறோம். வாகனங்களை எப்படி இறக்குமதி செய்வது என்பது குறித்த ஆயத்தத்திற்கு தயாராக உள்ளோம்.

இது தொடர்பான குழுவின் அறிக்கை ஒகஸ்ட் மாதம் இரண்டாவது வாரத்தில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என அவர் தெரிவித் தார். (நி-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 200 | 150 | 200 |
| உருளைக்கிழங்கு | 220 | 250 | 250 | 200 | 220 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 400 | 400-500 | 450 |
| தக்காளி | 450 | 300 | 420 | 350 | 450 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 160 | 160 | 130-150 | 200 |
| கோவா | 350 | 360 | 400 | 380 | 350 |
| கரட் | 450 | 500 | 500 | 250 | 600 |
| பூசணி | 200 | 200 | 200 | 150 | 280 |
| புடோல் | 160 | 350 | 200 | 200 | 200 |
| வாழைக்காய் | 250 | 260 | 200 | 160-200 | 250 |
| சின்ன வெங்காயம் | 300 | 250 | 400 | 250-500 | 300 |
| பெரிய வெங்காயம் | 250 | 250 | 250 | 250 | 200 |
| பாகற்காய் | 1200 | 500 | 800 | 800 | 600 |
| வெண்டக்காய் | 180 | 250 | 200 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 200 | 200 | 180 | 150 | 200 |
| பயற்றங்காய் | 350 | 400 | 350 | 350-400 | 350 |
| லீக்ஸ் | 500 | 500 | 500 | 250 | 600 |
| பீற்றூட் | 400 | 450 | 500 | 450 | 500 |
| கறிமிளகாய் | 800 | 800 | 800 | 400 | 1000 |
| முருங்கைக்காய் | 600 | 600 | 450 | 300-350 | 800 |
| போஞ்சி | 600 | 700 | 650 | 400 | 800 |
| கத்தரி தம்புள்ள | 150 | 150 | 200 | -- | 160 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 60 | 60 | 80 |
| தேசிக்காய் | 600 | 700 | 600 | 300-400 | 700 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 120 | 90 | 60-100 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 500 | 600 | -- | 500 |
| வெங்காயப்பூ | 400 | 350 | 450 | -- | 480 |
| முள்ளங்கி | 120 | 120 | 140 | 150 | 120 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 80 | 100 | 80 |
| ஈரப்பலா | 100 | 70 | 60 | 100 | 80 |

# இன்று ஒரு தகவல் 187



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

## சேர்க்கும் பணம் செல்லுபடியாகுமா?

ஒரு பெரியவர் இருந்தார். மிகவும் வசதியான பணக்காரர். அவர் எப்போதும் கையிலே ஒரு கழி வைத்திருப்பார். தினமும் வீட்டு வாசலிலே வந்து கம்பீரமாக உட்கார்ந்திருப்பார்.அவர் ஒரு நாள் ஒரு சாதாரண ஆளைப் பார்த்தார். அவர் வசதி எதுவும் இல்லாதவர். மிகவும் ஏழை. இப்படி வா என்று அந்த ஏழையை கூப்பிட்டார். அவரும் சொல்லுங்கள் என்று கேட்டுக்கொண்டே இவர் முன்னால் வந்து நின்றார்.

அந்தப் பணக்காரர் சொன்னார். இதோ பார் உன்னை விட மூடனை நான் இதுவரை பார்த்தது இல்லை. அதனாலே இதோ இந்த கழியை உன்னிடம் இப்போது கொடுக்கின்றேன் என்று சொல்லிவிட்டு அதை அந்த ஏழையிடம் கொடுத்தார். அவரும் அதை வாங்கிக்கொண்டு, இதை வாங்கிக் கொண்டு நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார். இந்தக் கழியை நீ உன்னிடமே வைத்திரு. உன்னை விட மூடனை நீ எப்போது சந்திக்கின்றாயோ அப்போது அவனிடம் நீ இதை கொடுத்து விடு என்றார் அவர். சரி என்று சொல்லிவிட்டு இவரும் அந்த கழியை வாங்கிக்கொண்டு போய்விட்டார்.

அதன் பின் பல வருடம் ஆகிவிட்டது. தன்னை விட மூடன் யாரையும் அந்த ஏழை பார்க்கவே இல்லை. அதனாலே அந்தக் கழி அவரிடமே இருந்தது. இப்படியே காலம் போய்க் கொண்டிருந்தது. ஒரு சமயம் அந்த கழியைக் கொடுத்த பணக்காரருக்கு உடல் நிலை மிகவும் மோசமாக ஆகிவிட்டது வியாதியாலே. அவர் உடம்பிற்கு முடியாமல்இருப்பதைக் கேள்விப்பட்டார் இந்த ஏழை. சரி போய் என்ன என்று பார்த்து விட்டு வரலாம் என்று புறப்பட்டார்.

அந்த ஊருக்குப் போய் சேர்ந்தார். அரண்மனை மாதிரி வீடு இருந்தது. என்ன பிரயோசனம் அவர் மிகவும் மோசமான நிலையிலே ஒரு சின்னக் கட்டிலிலே படுத்திருந்தார். தான் இனிமேல் பிழைக்க மாட்டேன் என்பது அவருக்கு நன்றாக புரிந்து விட்டது. இந்த ஏழை அவர் பக்கத்திலே போய் நின்றார். இப்போது எப்படி உடம்பு இருக்கிறது என்றார். அதற்கு அவர் நான் இந்த ஊரை விட்டு போகப் போகிறேன் என்று நினைக்கின்றேன் என்றார். அப்படி என்றால் மறுபடியும் எப்போது திரும்புவீர்கள் என்று கேட்டார். அந்த ஊருக்குப் போனால் திரும்பி வர முடியாது என்றார் அவர். அப்படி என்றால் அங்கே உங்கள் செலவிற்கு வேண்டிய பணத்தை எடுத்துக் கொண்டு போகின்றீர்களா என்று கேட்டார்.

அது தானே முடியாது இந்த ஊரின் பணம் அந்த ஊரிலே செல்லாது. சிறிது காலமே வாழப்போகின்ற அந்த ஊரிலே செலவு செய்வதற்கு நான் எவ்வளவோ பணம் சம்பாதித்தேன். ஆனால் அந்த ஊரிலே எந்தப்பணம் செல்லுபடியாகுமோ அந்தப் பணத்தை சம்பாதிக்காது விட்டு விட்டேன். என்று சொல்லி வருத்தப்பட்டார். அந்த பணக்காரர்.

அது என்ன பணம் என்று கேட்டார் அந்த ஏழை. அது தான் புண்ணியம் என்கிற பணம். கபீர்தாசன் என்ன சொல்கின்றார் என்றால் ராமநாமம் தான் அந்த பணம் என்கின்றார். போகின்ற போது அதை கூட எடுத்துக் கொண்டு போக வேண்டும் என்கின்றார். அந்த ஏழை தன் கையிலே இருக்கின்ற அந்த கழியையும் அந்த பணக்காரரையும் மாறிமாறி பார்க்கின்றார். பணக்காரர் படுக்கையிலே இருந்தபடியே இதைக் கவனிக்கின்றார்.

என்ன யோசனை செய்கின்றாய். அந்தக் கழியை என்னிடம் கொடுத்து விடு. என்னை விட மூடன் யாருமே இருக்க முடியாது என்கின்றார். இறைவன் நாமத்தை சொல்வது என்றால் வெறுமனே உச்சரிப்பது மட்டுமில்லை. அது எங்கள் மனதை பக்குவப்படுத்த வேண்டும். புண்ணிய காரியங்களை செய்வதற்கு அது காரணமாக அமையும்.

இந்தக் காலத்திலே எல்லாம் எங்களிடம் யாராவது அது மாதிரி கழியைக் கொடுத்து உன்னை விட மூடனைப் பார்க்கின்றபோது கொடுத்து விடு என்று சொன்னால் அப்படி கொடுப்பதற்கு அதிக நாள் ஆகாது. நான் கூட அப்படி செய்து பார்த்தேன். என்னுடைய நண்பர் ஒருவரிடம் ஒரு பால்பாயின்ட் பேனாவை கொடுத்து நீ கொஞ்ச நாள் இதனாலே எழுது. அதன்பின் உன்னைவிட அசடு யாராவது இருந்தால் அவரிடம் இதைக்கொடுத்து விடு என்று சொன்னேன்.

அவன் அதை வாங்கிப்பார்த்து அடுத்த வினாடியே என்னிடம் திரும்பிக் கொடுத்து விட்டு நீ தான் அந்த அசடு என்றான். ஏன் என்று கேட்டேன். ஒரு வாரத்திற்கு முன்னால் நான் தான் இதை உனக்குக் கொடுத்தேன். அந்த பேனாவிலே குச்சியே இல்லை. குச்சி இல்லாத பேனா எப்படி எழுதும்? எப்படி என்று என்னிடமே திரும்பக் கேட்கின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிப்படை வசதியின்மையால் நிர்க்கதியில் சாந்தபுர மக்கள்

(முறிகண்டி)

**கிளிநொச்சி, கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட சாந்தபுரம் கிராமத்தில் வசிக்கும் மக்கள் மின்சாரம், நீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகளின்றி நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர்.**

குறித்த பகுதியில் சுமார் 10 குடும்பங்கள் வாழ்ந்து வரும் நிலையில் தொடர்ச்சியாக தாம் அடிப்படை வசதிகள் எதுவும் இன்றி பெரும் சிரமத்திற்கு முகம் கொடுத்து வருவதாக அக்கிராம மக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை யானை, கரடி உள்ளிட்ட காட்டு விலங்குகளின் அச்சுறுத்தல்களுக்கும் தாம் நாளாந்தம் முகம்கொடுத்து வருவதாகவும் இதனால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதோடு, மின்சாரம் இல்லாமையால் மாணவர்களின் கல்வியும் பெரும் சவாலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் நீண்ட காலமாக நீடிக்கும் தங்களின் குறித்த பிரச்சினைகள் தொடர்பாக உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி, இவற்றுக்கு தீர்வொன்றை பெற்றுத்தர வேண்டும் என கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-6-100)

# புதிய மீன்பிடி சட்டத்திற்கு எதிராக சுவரொட்டிகள்



(மன்னார்)

அரசினால் உருவாக்கப்பட்ட புதிய மீனவச் சட்ட வரைபிற்கெதிராக நேற்று முன்தினம் புதன்கிழமை மன்னார் நகரப் பகுதியில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

மீனவ அமைப்புக்களின் ஒன்றியம் எனும் பெயரில் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் மன்னார் மாவட்ட இளைஞர் அமைப்பினரால் குறித்த சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

குறித்த சுவரொட்டியில் மீன்பிடி தொழிலை நம்பி வாழும் அனைவரினதும் வயிற்றில் அடிக்கும் புதிய மீன்பிடிச் சட்டத்தை தோற்கடிப்போம் என குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-6-285)

# மன்னாரில் அதிகரிக்கும் திருட்டு ஒரு நாளில் 4 வீடுகளில் திருட்டு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் அண்மைக்காலமாக தொடர்ச்சியாக திருட்டு சம்பவங்கள் இடம் பெற்று வருகின்ற நிலையில் நேற்று முன்தினம் ஒரே நாளில் பெரியகமம் பகுதியில் உள்ள நான்கு வீடுகளில் திருட்டு சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இந்த நிலையில் திருட்டு இடம்பெற்ற வீட்டில் இருந்த சி.சி.ரி.வி காணொளியை பார்வையிட்ட போது சந்தேகத்திற்கு இடமான நபர் ஒருவர் சொந்த வீட்டுக்குள் நுழைவது போன்று நுழைந்து பொறுமையாக வீட்டை உடைத்து வீட்டில் உள்ள குளிர்பான பெட்டியில் இருந்து நீர் அருந்தி விட்டு வீடு முழுவதிலும் தேடுதல் மேற்கொண்டு வீட்டில் இருந்த நகைகளை கொள்ளை இட்டு சென்றுள்ளார்.

அதே நேரம் குறித்த நபர் அருகில் இருந்த இன்னும் ஒரு வீட்டிலும் இவ்வாறே புகுந்து அவ்வீட்டில் இருந்த தாலி உட்பட பல லட்சம் பெறுமதியான நகைகள் திருடப்பட்டுள்ளன.

இவ்வாறு மன்னார் சாவற்கட்டு பகுதியில் நான்கு திருட்டு சம்பவங்கள் பதிவாகியுள்ளது.

இந் நிலையில் குறித்த வீட்டார் சம்பவம் தொடர்பில் மன்னார் பொலிஸாருக்கு தெரியப்படுத்தியதை தொடர்ந்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி-6-285)

# பங்கிடப்படாத நிலையில் சிறுபோகத்திற்கான காணிகள்

## கமக்கார அமைப்பு கடிதம்

(அக்கராயன்)

கிளிநொச்சி முரசுமோட்டை கமக்கார அமைப்பிற்கு உட்பட்ட பகுதியில் சிறுபோகத்திற்கு காணி பங்கிடப்படாமை தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட செயலாளருக்கு அண்மையில் கமக்கார அமைப்பு கடிதம் அனுப்பி உள்ளது.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கிளிநொச்சி முரசுமோட்டைப் பகுதியில் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள சிறுபோக நெற்செய்கையின் போது 65 ஏக்கர் காணி இனங்காட்டப்படாததன் காரணமாக விவசாயிகள் பயிர்ச் செய்கையில் ஈடுபட முடியாத நிலைமை உள்ளது. கமக்கார அமைப்பிற்கு பயிர்ச் செய்கைக்கான நீர்வரி மொத்த காணி 865 ஏக்கர் என 2024 ஆம் ஆண்டு சிறுபோக பயிர்ச் செய்கை கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட நிலையில் இச்சிறு போகத்திற்கான அமைப்பிற்குரிய விகிதாசாரத்தின் படி 614 ஏக்கர் விதைப்பு காணியாக தீர்மானிக்கப்பட்டது. மிகுதி 65 ஏக்கர் வரையான சிறிய விவசாயிகளின் பங்கிற்கு இதுவரை காணி பங்கிடப்படாமல் உள்ளது என அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக முரசுமோட்டை கமக்கார அமைப்பினால் யாழில் உள்ள மனித உரிமைகள் ஆணைக் குழுவிலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. 251ஏக்கர் மேலதிக விதைப்பாக இடம் பெற்றுள்ளதாக விவசாயிகளினால் தெரிவிக்கப்படுகின்றது. (நி-6-350)

# ஜனாதிபதி புலமைப்பரிசில் முல்லையில் வழங்கி வைப்பு



(முல்லைத்தீவு)

ஜனாதிபதி புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு நேற்று முல்லைத்தீவில் இடம்பெற்றது.

புலமைப்பரிசில் திட்டம் வழங்கும் நிகழ்வு முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி பொன்விழா மண்டபத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சரும் முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவருமான காதர் மஸ்தான் கலந்து சிறப்பித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் முல்லைத்தீவு கல்வி வலயத்திற்குட்பட்ட 472 மாணவர்களும் துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட 450 மாணவர்களுக்கும் மொத்தமாக 922 மாணவர்களுக்கு இந்த புலமைப்பரிசில்கள் வழங்கி வைக்கப்படவுள்ளது.

இந் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், வடக்குமாகாண ஆளுநரின் செயலாளர், மேலதிக மாவட்ட செயலாளர் (நிர்வாகம்), மேலதிக மாவட்ட செயலாளர் (காணி), பிரதேச செயலாளர்கள், மாகாண கல்விப் பணிப்பாளர், திட்டமிடல் பணிப்பாளர், அதிபர்கள், ஆசிரியர்கள், பிரதேச செயலாளர்கள், அபிவிருத்தி லொத்தர் சபையின் பிரதி முகாமையாளர், வலயக்கல்வி பணிப்பாளர்கள், மாவட்ட செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், பெற்றோர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (நி-6)

# சிறுபோகத்திற்கான பசளை மானியம் வழங்கி வைப்பு

(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுபோக நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள 9091 விவசாயிகளுக்கு பசளை மானிய பணம் வைப்பில் இடப்பட்டுள்ளதாக மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள பிரதி ஆணையாளர் பா.தேவரதன் தெரிவித்துள்ளார்.

ஒன்பது கமநல சேவை நிலையங்களின் கீழ் உள்ள விவசாயிகளுக்கு 7272.35 ஹெக்டேயர் நிலப்பரப்பிற்கு இதுவரை வைப்பில் இடப்பட்டுள்ளதாகவும் ஏனையவர்களுக்கு படிப்படியாக வங்கிக் கணக்குகளில் இடப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (நி-6-316)

# மாணவர்களுக்கு தெளிவூட்டும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி செயலகம் மற்றும் கல்வி அமைச்சு இணைந்து நடத்தும் 'அபிவிருத்தியை நோக்கி எமது நாடு' என்னும் தலைப்பில் "பொருளாதார பரிமாற்றல் சட்டமூலம்" மற்றும் "அரச நிதி முகாமைத்துவ சட்ட மூலம்" தொடர்பாக பாடசாலை மாணவர்களுக்கு தெளிவூட்டும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. (நி-6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 536





அப்படியானால் என்னை எதற்காகக் கேட்கிறாய்? உன்னைப் பரிசோதிப்பதற்காகக் கேட்கிறேன்! அவர்களை எங்கே ஒளித்து வைத்திருக்கிறாய் என்பதைச் சொல்லிவிடு! இல்லாவிட்டால் உங்கள் இருவரையும் இங்கேயே எரித்துச் சாம்பலாக்கி விடுவேன்!" என்றான் ரவிதாஸன்.

அவனுடைய புறக்கண்கள் அச்சமயம் நெருப்புத் தணல்களைப் போல அனல்வீசி ஜொலித்தன.

என்ன? உண்மையைச் சொல்கிறாயா, மாட்டாயா! ஓம் ஹ்ரீம் ஹ்ராம் வஷ்ட்! இதோ என் மந்திரத்தின் சக்தியைக் காட்டப் போகிறேன்."

பூங்குழலி பயத்தினால் நடுநடுங்கிச் சேந்தன் அமுதனைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டாள். அவனிடம் மெல்லிய குரலில், "நான் இப்போது ஓடப் போகிறேன். நீ அவனைத் தடுத்து நிறுத்தப்பார்!" என்றாள்.

மந்திரவாதியைப் பார்த்து உரத்த குரலில், "என்னை ஒன்றும் செய்ய வேண்டாம். அவர்கள் இருக்குமிடத்தைக் காட்டி விடுகிறேன்!" என்று கூறினாள்.

"என்னுடன் வா! காட்டுகிறேன்!" என்று சொல்லி விட்டுப் பாழடைந்த மண்டபத்துக்கு நேர்மாறான திசையை நோக்கி நடந்தாள்.

மந்திரவாதி அவளைப் பின் தொடரப் பார்த்தான். சேந்தன் அமுதன் பின்னாலிருந்து அவனைப் பிடித்து நிறுத்த முயன்றான்.

பூங்குழலி ஓடத் தொடங்கினாள். மந்திரவாதி சேந்தன் அமுதனை ஒரே தள்ளாகத் தலைகுப்புறத் தள்ளிவிட்டுப் பூங்குழலியைத் தொடர்ந்து ஓடினான்.

பூங்குழலி மானைப்போல் விரைந்து பாய்ந்து ஓடினாள். மந்திரவாதி மானைத் துரத்தும் வேடனைப்போல் அவளைப் பிடிக்க ஓடினான். ஆனால் அவளைப் பிடிப்பது எளிதில் முடிகிற காரியமாயில்லை.

மந்திரவாதி அவளைத் துரத்துவதை விட்டு நின்றுவிடலாமா என்று எண்ணிய போது பூங்குழலியும் களைத்துப் போனவளைப் போல நின்றாள். மந்திரவாதி மறுபடியும் அவளைத் துரத்தினான். இருவருக்கும் பின்னால் சேந்தன் அமுதனும் தட்டுத் தடுமாறி விழுந்தடித்து ஓடிவந்து கொண்டிருந்தான். ஓடும்போது மறைந்த மண்டபத்துக்குப் போய் அங்குள்ளவர்களுக்கு எச்சரிக்கை செய்யலாமா என்று அவன் அடிக்கடி நினைத்தான். அதே சமயத்தில் பூங்குழலியை மந்திரவாதியிடம் தனியாக விட்டு விட்டுப் போகவும் அவனுக்கு மனம் வரவில்லை.

பூங்குழலி ஒரு மேட்டின் மீது ஏறி நின்றாள். அங்கே சற்றுக் காத்திருந்ததோடு அல்லாமல், திரும்பிப் பார்த்து மந்திரவாதியைக் கைதட்டி அழைத்தாள். மந்திரவாதி மேல்மூச்சு கீழ் மூச்சு வாங்க அவள் அருகில் போய் நின்றான். அவளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு அவள் கன்னத்தில் நாலு அறை கொடுக்க வேண்டும் என்று அவன் எண்ணிய சமயத்தில் பூங்குழலி, "அதோ பார் என் காதலர்களை!" என்றாள்.

அவள் சுட்டிக்காட்டிய திசையை மந்திரவாதி பார்த்தான். முன்னொரு தடவை வந்தியத்தேவன் கண்ட காட்சியை அவனும் கண்டான். சதுப்பு நிலத்தில் ஆங்காங்கு தீப்பிழம்புகள் குப் குப் என்று தோன்றுவதும் கப் கப் என்று மறைவதுமாயிருந்தன. ரவிதாஸனுக்கு அந்தப் பயங்கரத் தோற்றத்தின் காரணம் என்னவென்று தெரியுமென்றாலும் அச்சமயம் அவனுக்கு ரோமம் சிலிர்த்தது.

"மந்திரவாதி! உனக்கு மந்திரம் தெரியுமென்றால், இந்தக் கொள்ளிவாய்ப் பிசாசுகளை ஓட்டுவதற்கு ஒரு மந்திரம் போடு பார்க்கலாம்! இவை என்னைப் பாடாய்ப் படுத்தி வைக்கின்றன!" என்றாள்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## உழைப்பே அதிஷ்டம் தரும்



ஒரு விவசாயிக்கு வயது அதிகமானதால் இறக்கும் தருவாயில் இருந்தார். தம் பிள்ளைகள் பொறுப்பில்லாமல் இருப்பதை பற்றி கவலையாக இருந்தார். ஒரு நாள், அவர் தம் பிள்ளைகளை அருகில் அழைத்தார் தன்னுடைய நிலங்களை அவர்களுக்குப் பிரித்துக் கொடுத்தார். அது மட்டுமல்லாமல் அந்த நிலங்களில் ஓரிடத்தில், ஓரடி ஆழத்தில் புதையல் இருப்பதாகச் சொன்னார். அதைத் தேடி எடுத்துக் கொள்ளும் படி சொல்லி விட்டு இறந்து போனார்.

பிள்ளைகள் மூவரும் தந்தைக்குச் செய்ய வேண்டிய இறுதிக் காரியங்கள் அனைத்தையும் செய்தார்கள்.

அதன்பின், அவர் குறிப்பிட்டிருந்த புதையலை எடுப் பதற்காக நிலத்தைத் தோண்ட ஆரம்பித்தார் கள்.

முதலில் மூத்த மகனின் நிலம் முழுவதையும் ஒரு அடி ஆழத்துக்கு தோண்டினார்கள். புதையல் எதுவும் கிடைக்கவில்லை. ஒரு வேளை, அப்பா இரண்டடி என்று சொல்வதற்கு பதிலாக "ஓரடி" என்று சொல்லிவிட்டாரோ என்ற சந்தேகத்தில் பிள்ளைகள் மூவரும் சேர்ந்து, மூத்தவனின் நிலத்தை இன்னும் ஓரடி ஆழமாகத் தோண்டினார்கள். அப்போதும் அவர்களுக்குப் புதையல் கிடைக்கவில்லை.

எப்படியும் புதையலைக் கண்டுபிடித்து விட வேண்டும் என்ற வெறியில், இரண்டாவது மகனின் நிலத்தையும் இரண்டடி வரை தோண்டினார்கள். ஏமாற்றம்தான் மிஞ்சியது.

இவ்வளவு தூரம் வந்தபின் எப்படி விட முடியும் என்று கடைசி மகனின் நிலத்தையும் இரண்டடி தோண்டினார்கள். மறுபடியும் ஏமாற்றமே!

அப்பா மேல் வருத்தம் வந்தாலும் அவர்கள் "சரி, தோண்டியது வீணாக வேண்டாம்" என்று எண்ணி அந்த நிலங்களில் விதை விதைத்தார்கள். நீர் பாய்ச்சினார்கள். உரம் போட்டார்கள். உழைப்பு வீண் போகுமா? ஆண்டு முடிவில் அவர்கள் நிலத்தில் அமோக விளைச்சல்.

அறுவடை செய்து விற்றதில் அவர்களுக்குக் கொள்ளை லாபம்.

இப்படி உழைப்பால் வரும் பயனைத்தான் அப்பா புதையல் என்று குறிப்பிட்டார் என்று பிள்ளைகள் மூவரும் புரிந்து கொண்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> தோல்விகளுக்கு இடையில்தான் வாய்ப்புகள் மறைந்திருக்கின்றன. அதனால் தோல்விகளைக் கண்டு அஞ்சாதே! ... – ஆல்பர்ட் ஐன்ஸ்டைன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சுகாதார அமைச்சரின் யாழ்.விஜயம் எதற்கானது?

தவறுகள் சுட்டிக்காட்டப்படும்போது – பிழைகளைத் தெரியப்படுத்தும்போது அவற்றை நிவர்த்தி செய்வதுதான் சிறந்த நிர்வாகத்துக்குரிய இலட்சணம்.

இதை விடுத்து, விட்ட தவறுகளைக் கண்டு கொள்ளாமலும் செய்த பிழைகளை மூடி மறைக்கவும் முற்படும்போதுதான் அதன் எதிர்விளைவு படுமோசமாகி விடுகிறது.

இதற்கு அரகல போராட்டம் நல்லதோர் உதாரணம். ஆம் அரகலப் போராட்டம் உச்சம் தொடுவதற்கு முன்னதாக, காலிமுகத்திடலில் ஒரு தொடர் போராட்டம் ஆரம்பமாகியது.

பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன் வைத்து ஆரம்பிக்கப்பட்ட அந்தப் போராட்டத்துக்குப் பொது அமைப்புகளும் பொதுமக்களும் தமது ஆதரவை வழங்கினர்.

இந்நிலையில் ஆளுந்தரப்பு போராட்டம் நடத்துபவர்களிடம் சென்று, அவர்கள் முன் வைக்கின்ற குற்றச்சாட்டுக்களைக் கருத்திலெடுத்து அவற்றை நிவர்த்திப்பது தொடர்பில் ஆராய்ந்திருக்க வேண்டும்.

மேலாக, போராட்டம் நடத்துபவர்களின் நியாயபூர்வமான கோரிக்கைகளை முதன்மைப்படுத்தி விசாரித்திருக்க வேண்டும்.

அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருக்க வேண்டும். ஆனால் செய்ய வேண்டியதைச் செய்யாமல் போராட்டம் நடத்தியவர்கள் மீது நீர்த்தாரை பிரயோகித்தும் தடியடி நடத்தியும் போராட்டத்தை நசுக்க முற்பட்டபோதுதான்; ஆட்சியாளர்களை வீட்டுக்கு அனுப்புகின்ற அளவில் குறித்த போராட்டம் வீரியம் பெற்றது.

ஆக, மக்களின் எதிர்ப்பை – மக்கள் முன் வைக்கின்ற குற்றச்சாட்டுக்களை தூக்கி எறிந்தால் நிலைமை இன்னும் மோசமாகும் என்பதை நாம் அனுபவ ரீதியில் கண்டுள்ளோம்.

இது ஒருபுறமிருக்க, யாழ்ப்பாணத்துக்கு நேற்று முன்தினம்(17) வருகை தந்த சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன சாவகச்சேரி வைத்தியசாலைக்கு நேரில் சென்று நிலைமைகளை ஆராய்ந்திருக்க வேண்டும்.

தவிர, சாவகச்சேரி வைத்தியசாலையின் பயனாளிகளாகிய அந்தப் பிரதேசத்து மக்களை அழைத்து அவர்களுடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியிருக்க வேண்டும்.

ஆனால் அவர் அதனைச் செய்யவில்லை.

இங்குதான் வட மாகாண சுகாதாரத்துறையில் குழறுபடிகளும் குறைபாடுகளும் இடம்பெறுவதற்கு மத்திய சுகாதார அமைச்சர் உறுதுணையாக இருக்கிறாரோ என்று எண்ணத் தோன்றுகிறது.

தவிர, வட மாகாண சுகாதார நிர்வாகம் அவரை இங்கு அழைத்து சாவகச்சேரி வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகர் யார் என்பதையும் மருத்துவர் அர்ச்சுனா பதில் அத்தியட்சகர் இல்லை என்பதையும் அவரின் வாயால் சொல்ல வைத்துள்ளனரா என்றும் எண்ணத் தோன்றுகிறது.

எது எவ்வாறாயினும் காய்க்குள் பழமோடுகின்ற திருகுதாள வேலைகள் எல்லாவற்றையும் பழுதாக்கிவிடும். கவனம்.

# பாடசாலை நேரத்தில்
# தனியார் கல்வி நிறுவனத்தில் கற்பித்த ஆசிரியர் இடைநீக்கம்

உயர்தர மாணவர்களுக்கு கணிதம் கற்பித்த ஆசிரியர் ஒருவர், இடைநீக்கம் செய்யப்பட்டார். பாடசாலைக்கு சமுகமளிக்காது, உயர்தர வகுப்பு மாணவர் குழுவிற்கு பணத்திற்காகப் பிரத்தியேக வகுப்பை நடத்தினார் என்ற குற்றச்சாட்டிலேயே அந்த ஆசிரியரை இடைநீக்கம் செய்துள்ளதாக வடமத்திய மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.டபிள்யூ. சமரக்கோன் தெரிவித்தார்.

இடைநீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர், அநுராதபுரம் பாடசாலையொன்றில் கற்பிப்பவர் என்பது தெரியவந்துள்ளது.

இந்த ஆசிரியர், பாடசாலை நேரங்களில் மாணவர்களுக்கு பிரத்தியேக வகுப்புகளில் பணத்திற்காகக் கற்பிப்பதாக பெற்றோர் குழுவொன்று மாகாணக் கல்விப் பணிப்பாளரிடம் முறைப்பாடு செய்திருந்தது.

அந்த முறைப்பாட்டின் பேரில், மாகாணக் கல்விப் பணிப்பாளர், ஏனைய பணியாளர்கள் குழுவுடன் இணைந்து பாடசாலையை ஆய்வு செய்த போது, இந்த ஆசிரியர், பாடசாலைக்குச் சென்று, ஆசிரியர்களின் வருகைப் பதிவேட்டில் கையொப்பமிட்டு, பாடசாலைக்கு வெளியே சென்று பிரத்தியேக வகுப்பில் மாணவர்களுக்கு கற்பித்ததைக் கண்டுபிடித்தனர்.

இவ்வருடத்தில் இது வரையிலும் எவ்வித அங்கீகாரமும் இன்றி இந்த ஆசிரியர் 26 நாட்கள் விடுமுறை எடுத்துள்ளதாகவும் மாகாணக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இதன்படி, குறித்த ஆசிரியரை மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.டபிள்யூ. சமரக்கோன், புதன்கிழமை முதல் அமுலுக்கு வரும் வகையில் பணி இடைநிறுத்தம் செய்திருந்தார். (ம-7)

### மின் கட்டணம் குறைக்கப்பட்டாலும்
# பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலைகளைக் குறைக்கமுடியாது
### இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம்

(கொழும்பு)

மின்சாரக் கட்டணம் குறைக்கப்பட்ட போதிலும் பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலைகளை குறைக்க முடியாது என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் எம்.கே. ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

மின்சாரக் கட்டணம், எரிபொருள் கட்டணம், எரிவாயு விலைகள் அதிகரித்த போதிலும் பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

பேக்கரி பொருட்களுக்குத் தேவையான பிரதான பொருட்களான மா, சீனி, முட்டை மற்றும் மாஜரின் ஆகியவற்றின் விலை குறைக்கப்பட்டால், பேக்கரிப் பொருட்களின் விலை குறைக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை எரிபொருள், சமையல் எரிவாயு, மின்சாரம் போன்றவற்றின் விலைகள் குறைக்கப்பட்டுள்ள போதிலும் நுகர்வோருக்கு சலுகைகளை வழங்காத வர்த்தகர்களை கண்டுபிடிக்க நாடளாவிய ரீதியில் சுற்றிவளைப்புகளை மேற்கொள்ளுமாறு நுகர்வோர் அதிகார சபையின் அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# கிண்ணியா கடற்கரையில் பெண்ணின் சடலம் மீட்பு

கிண்ணியா - தோனா கடற்கரையிலிருந்து நேற்று முற்பகல் பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கிண்ணியா அஹமட் ஒழுங்கையைச் சேர்ந்த, 33 வயதான பெண் ஒருவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

நீராடச் சென்ற அவர் நீரில் மூழ்கி உயிரிழந்திருக்கலாமெனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டனர்.

விசாரணைகளின் பின்னர், சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

# கோப்பாயில் இன்று பிரதேச தொழிற்சந்தை

(கோப்பாய்)

மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களமும், கோப்பாய்ப் பிரதேசசெயலகமும் இணைந்து நடாத்தும் பிரதேச தொழிற்சந்தை-2024 இன்று வெள்ளிக்கிழமை காலை-09 மணி முதல் கோப்பாய்ப் பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

குறித்த நிகழ்வில் வேலைவாய்ப்பு, தொழில் வழிகாட்டல், தொழில்சார் பயிற்சி மற்றும் வேலைதேடுவோரைப் பதிவு செய்தல் ஆகிய சேவைகள் நடைபெறவுள்ளன. (ம-7)

# முன்னாள் கிரிக்கெட் வீரர் சுட்டுப் படுகொலை
### சந்தேக நபர் ஒருவர் கைது

(கொழும்பு)

2002ஆம் ஆண்டு 19 வயதிற்குட்பட்ட இலங்கை இளையோர் கிரிக்கெட் அணியின் தலைவராகச் செயற்பட்ட தம்மிக்க நிரோஷன் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில், விசாரணைகளை மேற்கொள்ளும் அம்பலாங்கொடைப் பொலிஸார் நேற்று முற்பகல் குறித்த சந்தேகநபரை கைது செய்துள்ளனர்.

தொலைபேசி தரவுகள் மற்றும் சிசிடிவி காணொளிக் காட்சிகளின் அடிப்படையில் குறித்த சம்பவம் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ம-7)

### திருகோணமலையில்
# போதை மாத்திரைகளுடன் சகோதரர்கள் கைது

திருகோணமலை உப்பு வெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அக்போபுர பகுதியில் போதை மாத்திரைகளுடன் சகோதரர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த கைது நடவடிக்கையானது சர்தாபுர விசேட அதிரடிப்படையினரால் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்டதாக உப்பு வெளி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது, 26 மற்றும் 28 வயதுடைய சகோதரர்கள் இருவரே கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களிடமிருந்து 362 போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், கைது செய்யப்பட்ட இரு சந்தேக நபர்களையும் திருகோணமலை நீதிமன்ற நீதவானிடம் முன்னிலைப்படுத்திய போது எதிர்வரும் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

மேலும், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை உப்பு வெளி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்டவிரோத மீன்பிடியை

# கடல் உயிரினங்கள் பெரிதும் பாதிப்பு

## வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம்

**(கொழும்பு)**

**சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளினால் கடல் வாழ் உயிரினங்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாக வன ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக் களம் கவலை தெரிவித்துள்ளது.**

குறிப்பாக ஆமைகள் மற்றும் டொல்பின்கள் போன்ற பாலூட்டி விலங்குகளின் உயிருக்குப் பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள தாகவும், கடந்த ஒரு வாரத்தில் மட்டும் மேற்கு கடற்கரை பகுதியில் 10 இற்கும் மேற்பட்ட ஆமைகளின் உடல்களை வன விலங்கு அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர் எனவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இதேவேளை சட்ட விரோத மீன்பிடி நடவடிக்கைகளினால் மீன்பிடித்துறையும், சுற்றுலாத் துறையும் கடுமையாகப் பாதிக் கப்படுவதாக வன ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக் களத்தின் மேற்குப் பிராந்திய கால்நடை வைத்தியர் சுஹதா ஜயவர்தன குறிப்பிட்டுள்ளார். (நி-6)

## ஆயுதங்கள் புழக்கத்தில் இருப்பதே சூட்டுச் சம்பவங்களுக்கு காரணம்

(கொழும்பு)

யுத்தத்தின் பின்னரும் சமூ கத்தில் துப்பாக்கிகள் புழக்கத் தில் இருப்பதே நாட்டில் இடம் பெறும் தூப்பாக்கிச் சூட்டு சம்ப வங்களுக்குக் காரணம் என மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள் ளார்.

பொதுப் பாதுகாப்பு அமைச் சின் வளாகத்தில் நேற்று காலை நடைபெற்ற செய்தி யாளர் சந்திப்பில் அவர் இத னைக் குறிப்பிட்டுள்ளார்.

போதைப்பொருள் விற் பனை செய்பவர்களுக்காக இன் னும் கடுமையாகச் செயற்படு வோம்.

அதுருகிரிய சம்பவத்தில் கைது செய்யப்பட வேண்டியவர் களில் பலரை கைது செய்துள் ளோம். இன்னும் இரண்டு பேரை கைது செய்ய வேண்டி யுள்ளது

எம்பிலிப்பிட்டியவில் துப் பாக்கிச் சூடு நடத்தியவர் மற் றும் ரைடா ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அம்பலாங்கொடை துப்பாக் கிச்சூட்டு நபர் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டுள் ளார். விடுதலைப் புலிகளின் போருக்குப் பிறகு வெளிவந்த ஆயுதங்கள் உலாவருவதா லேயே இதனை இன்னும் கட்டுப்படுத்த முடியாதுள்ளது. என அவர் தெரிவித்துள் ளார். (நி-6)

## புத்தளத்தில் ஒரு தொகை உலர்ந்த மஞ்சள் மீட்பு

(புத்தளம்)

நாட்டிற்கு சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட 778 கிலோ கிராம் உலர்ந்த மஞ்சளை கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

புத்தளம் வெள்ள முண்டலம தொடக்கம் கொலங்கனத்த வரையான கடற்கரைப் பகுதியில் நேற்று முன்தினம் புதன் கிழமை மாலை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கை யின் போது இந்த உலர்ந்த மஞ்சள் மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பிலான விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் வரை உலர் மஞ்சள் பொதி கடற்படையினரின் பொறுப்பில் வைக்கப் பட்டுள்ளது. (நி-6)

## நாடு முழுவதும்...

கைது செய்யப்பட்டவர்களில் 701 ஆண்களும் 12 பெண் களும் காணப்படுவதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களில் 30 பேர் பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதுடன், 55 பேர் புனர் வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 197 கிராம் 213 மில்லிகிராம் ஹெரோயின், 647 கிராம் 9 மில்லிகிராம் ஐஸ், 3,089 கிராம் 493 மில்லிகிராம் கஞ்சா, 10,752 கஞ்சா செடிகள் மற்றும் 440 போதை மாத்திரைகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. (ழ-7)


# கேள்வி அறிவித்தல்
## நல்லூர் பிரதேச சபை

### மேலதிக முத்திரைத் தீர்வை மற்றும் சபை நிதி மூலமான அபிவிருத்தி வேலைத் திட்டங்கள்

01. தலைவர் பெறுகைக்குழு நல்லூர்ப் பிரதேச சபை கொக்குவில் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ் குறிப்பிட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோருகின்றார்.
02. தேசிய போட்டிக் கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி புனரமைப்பு வேலைகளுக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
04. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிக்கப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம்பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் '**தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி கொக்குவில்** எனும் முகவரியில் (தொலைபேசி இலக்கம் - **021-222-2700**) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் **தலைவர் பெறுகைக்குழு நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி கொக்குவில் என்னும் இடத்திலிருந்து 2024.07.19 ம் திகதியிலிருந்து 2024.08.01 ம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 தொடக்கம் பி.ப 3.00 வரையும்** மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா இல 1-4 3000.00 இல 5 6000.00 (வரி நீங்கலாக) பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
07. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்** என்னும் முகவரிக்கு **2024.08.02** ம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
08. கேள்வி பிணை வைப்புத் தொகையினை கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அனுமதிக்கப்பட்ட வங்கியில் செலுத்தி அதன் உண்மைப் பிரதியினை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.
09. கேள்வி திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் **2024.07.26** ஆம் திகதி நல்லூர் பிரதேச சபை கலாச்சார மண்டபத்தில் **மு. ப. 10.00** மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்திற்கு ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் கலந்து கொள்ள முடியும்.

| இல | நிதிமூலம் | ஒப்பந்த இல | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (Vat நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி செல்லுபடியாகும் காலம் | கேள்வி பிணை வைப்பு | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | தொகை (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| 01 | மேலதிக முத்திரைத் தீர்வை | NPS/ASD/2024/En.M.Cent/02 | சுற்றுச்சூழல் கண்காணிப்பு நிலையம் அமைத்தல் - கொக்குவில் | 8.84 | 84 Days | C7 and C6 | 77 Days | 133,000.00 | 15.11.2024 |
| 02 | சபைநிதி | NPS/CF-III/2024/01 | வீதிகள் புனரமைத்தல் தொகுதி – 01 (பலாலி வீதி உப ஒழுங்கை, டிப்போ வீதி உப ஒழுங்கை, வளாக வீதி உப ஒழுங்கை 1,2) | 6.818 | 84 Days | C7 and C6 | 77 Days | 105,500.00 | 15.11.2024 |
| 03 | சபைநிதி | NPS/CF-III/2024/02 | வீதிகள் புனரமைத்தல் தொகுதி – 02 (முதலியார் தோட்டம் வீதி, முதலியார் தோட்டம் உப ஒழுங்கைகள் 7,8,9,10) | 8.83 | 84 Days | C7 and C6 | 77 Days | 132,500.00 | 15.11.2024 |
| 04 | சபைநிதி | NPS/CF-III/2024/03 | வீதிகள் புனரமைத்தல் தொகுதி – 03 (விக்னேஸ்வரா வீதி உபஒழுங்கை, முத்தட்டுமடம் உபஒழுங்கை, பாரதி வீதி, கலாசாலை வீதி உபஒழுங்கை) | 3.54 | 84 Days | C8 and C7 | 63 Days | 53,500.00 | 01.11.2024 |
| 05 | சபைநிதி | NPS/CF-III/2024/04 | காரைமுனங்கு திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையத்திற்கு மதில் மற்றும் கேற் அமைத்தல் | 13.177 | 84 Days | C6 and C5 | 77 Days | 198,000.00 | 15.11.2024 |

**தலைவர்**
**உள்ளூர் அதிகார சபைப் பெறுகைக் குழு**
**நல்லூர் பிரதேச சபை.**

19.07.2024 (C-0820)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடும்பஸ்தர்...

பட்டுள்ளார்.

கச்சாய் தெற்குப் பகுதியைச் சேர்ந்த மேற்படி குடும்பஸ்தர் வீட்டில் இருந்து இரு நாட்களாக காணாமல் போயிருந்த நிலையில் கடற்கரையில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளுக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.(ம-7,30)

## புத்தர் சிலை...

ரையில் இருந்து புத்தர் சிலையை திருடிய குற்றச்சாட்டில் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விகாரையில் இருந்த புத்தர் சிலையைத் திருடிக்கொண்டு, படகில் ஏறி குறிகாட்டுவான் பகுதிக்கு வந்த நிலையில் இளைஞன் புத்தர் சிலையுடன் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட இளைஞனை மேலதிக சட்ட நடவடிக்கைக்காக ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்ட நிலையில், பொலிஸ் விசாரணையில் இளைஞன் மனநிலை பாதிக்கப்பட்டவர் என்பது தெரியவந்துள்ளது.

மேலதிக விசாரணையின் பின்னர் இளைஞனை ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-7)

## சுகாதார...

நாடகம் என மருத்துவர் அர்ச்சுனா குற்றம் சுமத்தியுள்ளார்.

நேற்று வியாழக்கிழமை சாவகச்சேரியில் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாண சுகாதார மேம்பாடு தொடர்பில் மாகாண சபை கட்டடத்தில் இடம்பெற்ற கூட்டத்திற்கு நான் செல்வதாக இருக்கவில்லை.

நான் குறித்த தினத்தில் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் வாக்குமூலம் வழங்குவதற்காகச் சென்றிருந்தேன்.

ஆனால் சுகாதார அமைச்சின் அதிகாரிகள் என்னை தொலைபேசியில் அழைத்ததால் 11.15 மணியளவில் அங்கே சென்றிருந்தேன். அங்கே ஓர் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையிலேயே கலந்துரையாடல் இடம்பெற்றது.

புகழ்பெற்ற அரசியல்வாதிகள் அங்கே கலந்துகொண்ட போதிலும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் தற்காலிக தேவைப்பாடு குறித்து அவர்கள் பேசவில்லை.

பல்லாயிரக்கணக்கான மக்கள் கதவடைத்து சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் நலனுக்காக போராடிய போதிலும் குறித்த கலந்துரையாடலுக்கு வந்த 95 சதவீதமான அரசியல் பிரமுகர்கள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை என்று ஒன்று இருப்பதாகவே காட்டிக்கொள்ளவில்லை.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை தொடர்பாக ஒரு பொதுமகன் எழும்பிக் கதைத்தபோது கைது செய்தனர். இது ஓர் கண்துடைப்பு நிகழ்சிநிரல் என்பதால் நான் அங்கிருந்து வெளியேறி விட்டேன். நான் சாவகச்சேரி வந்த பின்னர் அமைச்சர் என்னைத் தேடுகிறார் என்றனர். நான் சாவகச்சேரி வந்து விட்டேன் மீண்டும் வருவதானால் நேரம் கடந்து விடும் என்றேன். பின்னர் அமைச்சர் மன்னார் செல்கிறார் அங்கு வந்து சந்திக்குமாறு கூறினார்கள்.

ஆனால் நான் அதனை மறுத்து விட்டேன். அதன் பின்னர் எனக்கு இன்று (நேற்று) சுகாதார அமைச்சிற்கு வருமாறு ஆங்கிலத்தில் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என மேலும் அவர் தெரிவித்திருந்தார். (ம-7,30,33)

## புலிகள்...

சந்தர்ப்பத்தில் ஆசிரியர்கள் பதுங்குக் குழிகளுக்குள் அமர்ந்து மாணவர்களுக்குக் கல்வி கற்பித்தனர்.

தொழிற்சங்கங்கள் தமது அரசியல் நலனுக்காக 10 ஆயிரம் பாடசாலைகள் மூடப்படுவது அவர்களது பலம் எனக் கருதுகின்றனர்.

யுத்த காலத்தில் விடுதலைப் புலிகள் பாடசாலைகளை மூடுவதற்கு இடமளிக்கவில்லை.

ஆசிரியர்கள் தெய்வங்கள் என்ற நிலைமையை மாற்றி, பாடசாலைக்குச் செல்லாத தொழிற்சங்கங்களின் தலைவர்கள் அரசியல் நலனுக்காக அதிபர்களையும் ஆசிரியர்களையும் பயன்படுத்தி இலவசக் கல்விக்குப் பாரிய களங்கத்தை ஏற்படுத்தி வருகின்றனர் என்றார். (ம-7)

## மகாவம்ச...

தொகுப்பு உலக பாரம்பரியச் சின்னமாக அறிவிக்கப்பட்டது.

இந்த விழாவுக்கு பிரதம விருந்தினராக யுனெஸ்கோவின் பணிப்பாளர் நாயகம்ஒட்ரே அசுலே கலந்துகொண்டார்.

யுனெஸ்கோ பணிப்பாளர் நாயகத்தினால் மகாவம்சத்தை உலக மரபுரிமைச் சின்னமாக பிரகடனப்படுத்துவதற்கான சான்றிதழ் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வேந்தர் பேராசிரியர் ஜி.எச்.பீரிஸிடம் கையளிக்கப்பட்டது.

அத்துடன், பல்கலைக்கழகத்துக்கு விஜயம் செய்ததைக் குறிக்கும் வகையில் பிரதி வேந்தர் பேராசிரியர் எம்.டி.லமவன்ச, பணிப்பாளர் நாயகத்திற்கு நினைவுச் சின்னம் ஒன்றையும் வழங்கி வைத்தார். (ம-7)

(மற்றொரு செய்தி உள்ளே)

## தேர்தலை...

வர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

ஹொரணைப்பகுதியில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்டபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் நிச்சயமாக நடைபெற வேண்டிய ஒன்று என மகிந்த தேசப்பிரிய சுட்டிக் காட்டியுள்ளார். (ம-7)

## அதி...

21ஆக உள்வாங்கப்பட்டது.

இந்த நிலையில் ஜனாதிபதியின் பதவிக்காலம் உட்பட பல்வேறு சிக்கல்களை தீர்க்கும் வகையில் 22ஆவது திருத்தச் சட்டத்தைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கான அனுமதி கடந்த அமைச்சரவையில் வழங்கப்பட்டது.

இதற்கு நாடு முழுவதும் பல்வேறு எதிர்ப்புகள் எழுந்துள்ளதுடன், 22ஆவது திருத்தச்சட்டத்தை இத்தருணத்தில் நிறைவேற்ற அரசாங்கம் முற்பட்டால் கடுமையான போராட்டங்களைச் சந்திக்க நேரிடும் என எதிர்க்கட்சிகள் எச்சரிக்கையும் விடுத்துள்ளன.

என்றாலும், அடுத்த பாராளுமன்ற அமர்வில் இதனைச் சமர்ப்பித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நகர்வுகளில் ஈடுபட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்த நிலையில், 22ஆவது திருத்தச்சட்டத்தை வர்த்தமானியில் வெளியிட வேண்டாம் என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, அமைச்சின் செயலாளருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் நாட்டில் நிச்சயமற்ற நிலைமையொன்றும் சந்தேகங்களும் எழுந்துள்ளதால் தேர்தல் முடியும்வரை இந்த விடயத்தை ஒத்திவைக்குமாறும் அவர் உத்தரவு பிறப்பித்துள்ளார். (ம-7)

## காணித் தகராறு
# சிப்பாய் படுகொலை

மாத்தளை மஹா வெல, மில்லவன பிரதேசத்தில் காணிப் பிரச்சினையினால் ஏற்பட்ட மோதலில் கடற்படை சிப்பாய் ஒருவர் கொலை என மஹா வெல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மோதலில் மில்லவன பஹல் கம பிரதேசத்தைச் சேர்ந்த 46 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையான இந்திக பிரசாத் பண்டார என்பவரே கொலை செய்யப்பட்டுள்ளார். (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2024.07.18
சீட்டிழுப்பு இலக்கம் 5538
K 7 4 2 8 2 4
அத சம்பத K 2 8 2 4
சீட்டிழுப்பு இலக்கம் 113

தன நிதானய
திகதி - 2024.07.18
சீட்டிழுப்பு இலக்கம் - 1568
C 31 46 76 77 C
23889

மெகா பவர்
திகதி 18/07/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1886
Y 20 30 50 60 71
39071

லக்கி 7 VIP
திகதி 2024.07.18
சீட்டிழுப்பு இலக்கம் 364
J 3 9 8 1 8 9 J

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3780
சீட்டிழுப்பு திகதி 18.07.2024
Q 20 28 64 76
Q 40996

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.07.18
சீட்டிழுப்பு இலக்கம் 0847
மேடம் 15 22 28 33 மேடம்
20735 03

உத்தியோகபூர்வ முடிவுகள்
18.07.2024 வெற்றி வாரம் 246 வர்ணம் மஞ்சள்
U 6 4 1 8 9 6
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,870,600.00
53676

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2512 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 18.07.2024 தினம் வியாழன்
02 17 24 54 E
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 99,561,129.60

சனிதா
திகதி 2024.07.18 வெற்றி வாரம் 4673 வர்ணம் சிவப்பு
05 29 34 41 S
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.65,578,752.00
15091

சீட்டிழுப்பு வாரம் 4224 வர்ணம் கபிலம்
சீட்டிழுப்பு திகதி 2024.07.18 தினம் வியாழக்கிழமை
37 42 50 58 கும்பம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 5,895,784.00
647534

U 37 18 22 49 70
சீட்டிழுப்பு வாரம் 1688
18.07.2024 வியாழன்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 533,907,021.80

அட கோட்டிபதி
வியாழக்கிழமை
வெற்றி வாரம் : 2338
சீட்டிழுப்பு திகதி : 2024.07.18
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.51,592,163.20
45 49 71 74 W
205845


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறிவிட்டது

ரகுநாதன் சக்திதாசன் என்பவரின் தேசிய அடையாள அட்டை (893412271 V), வங்கி அட்டை என்பன சுன்னாகத்திற்கும் நவாலிக்கும் இடைப்பட்ட பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். (1507)

**077 432 7225**

## கடை விற்பனைக்குண்டு

K.K.S றோட் மருதனார்மடத்தில் 36'x12' இல் அமைந்த கடை விற்பனைக்குண்டு. (1503)

தொடர்பு:

**077 829 4182**

## பண்ணை வேலைக்கு ஆள் தேவை

1. சம்பளம் 55,000/= (வீடு கொண்டு செல்லலாம்)
2. உணவு இலவசம்.
3. EPF&ETF முழுவதும் எம்மால் கட்டப்படும்.
4. மாத விடுமுறையில் வீடு சென்று வரலாம்.
5. மது அருந்த முடியாது மற்றும் smart phone பாவிக்க முடியாது.

(170)

தொடர்புகளுக்கு:

**076 778 8493**
**077 966 9498**
**076 760 0403**

## வங்கி மீதி வசதி (Show money)

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்

தொடர்புகளுக்கு: (157)

**074 17 37 684**

## மணப்பெண் தேவை

- பருத்தித்துறை, இந்து, கௌரவ குலம், 1990, அவிட்டம், Bsc.(Hons). Canada citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- காரைநகர், இந்து, கௌரவ குலம், 1989, சித்திரை, Graduate, UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- சாவகச்சேரி, இந்து, கௌரவ குலம், 1988, பூரட்டாதி, Bsc. Engineering (Civil). Australia citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- அச்சுவேலி - மானிப்பாய், இந்து, கௌரவ குலம், 1987, பரணி, CIMA (Charted Management Accountant - UK), UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- அளவெட்டி, வல்வெட்டி, இந்து, கௌரவ குலம், 1986, பரணி, Graduate, Australia citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- கரவெட்டி, இந்து, கௌரவ குலம், 1986, திருவோணம், BA (Hons). Accounting and finance CIMA fully qualified, UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- காரைநகர், இந்து, கௌரவ குலம், 1986, மகம், Bsc, MBA, Phd, UK citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- வடமராட்சி, இந்து, கௌரவ குலம், 1985, கார்த்திகை, Msc (Electronic Engineering), UK citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- பளை, இந்து, கௌரவ குலம், 1984, அவிட்டம், Phd, UK citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- கரவெட்டி, இந்து, கௌரவ குலம், 1984, விசாகம், Graduate, UK citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை.

(1506)

S.Sharma J.P Astrologer
- 077 539 3728
- 076 528 4510

## முழுநேர / பகுதிநேர வேலைவாய்ப்பு

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துக்கு ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அடிப்படைத் தகைமைகள்** (1487)

- ✓ G.C.E (O/L) பரீட்சையில் கணிதம், தமிழ் உட்பட 6 பாடங்களில் சித்தி.
- ✓ 18 – 60 வயதுக்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிபரக்கோவையை (BIO DATA) கீழ்வரும் Whatsapp இலக்கத்துக்கு அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

Whatsapp: **077 756 3781**
Email: jenyjude77@yahoo.com

## Care Giver - பராமரிப்பாளர்

கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma

கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)

CIMS College
49A, Chapel Street, Jaffna.
(C-0821)

College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

## V2 VISA SERVICES

கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
- கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்
- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-0821)

## அனைத்து நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்கள்

குறைந்த விலையில்
- Air Ticket Date Change
- Travel Insurance
- Online Visa Appoinments
- Travel Itinerary
- Sri Lanka Visa Extension
- All Country Visa Services

(C-0821)

உங்கள் அருகாமையில் எமது நேரடி கிளைகள்
கொழும்பு | மட்டக்களப்பு | திருகோணமலை | கிளிநொச்சி | புதுக்குடியிருப்பு | கொடிகாமம் | சாவகச்சேரி | புத்தூர் | யாழ்ப்பாணம் | நாச்சிமார் கோவிலடி | பண்டத்தரிப்பு | சுன்னாகம் | மானிப்பாய் | சங்கானை | கோப்பாய் | நெல்லியடி | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை

V2 TRAVELS 0768226240 0768226241


# 31 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 20.06.2024 வியாழக்கிழமை அன்று சிவபதம் அடைந்த எமது அன்புத் தெய்வம்

## அமரர்

## செல்வி. மாலதி சிவராசா

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் நேற்று வியாழக்கிழமை (18.07.2024) காலை 6.00 மணியளவில் கீரிமலை தீர்த்தக் கரையில் நடைபெற்றது. வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் 20.07.2024 நாளை சனிக் கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடை பெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன் னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்பத்தின் குலவிளக்கை இழந்து நாம் தவித்த வேளையில் ஓடோடி வந்து எமக்கு ஆறுதல் சொன்னவர்களுக்கும் கண்ணீர் அஞ் சலிகளை வெளியிட்டவர்களுக்கும், அனுதாபப் பதாகைகளை காட்சிப் படுத்தியவர்களுக்கும் தொலைபேசி மூலம் எமக்கு ஆறுதல் கூறியவர் களுக்கும், சமூகவலைத்தலங்களில் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் குறிப்பாக பாடசாலைச் சமூகத்திற்கும் பழைய மாணவர் சங்கத்தினருக் கும் 11 star விளையாட்டுக் கழகத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றி களை இருகரம் கூப்பி தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

அமுத சுரபி பொன்னையா லேன்,
ஆனைக்கோட்டை. (C-819)

இங்ஙனம்
குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்றெட் ஸ்தாபனத்தாரால் இல. 19 [illegible] யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.07.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org